# காங்கேசன் முரசு

"தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2018"

சிறப்பிதழ்

**வெளியீடு**

வாசகர் வட்டம்,
காங்கேசன்துறை பொதுநூலகம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கேசன் முரசு

தேசிய வாசிப்பு மாத சிறப்புச் சஞ்சிகை – ஒக்டோபர் 2018

இதழ் - 01




வெளியீடு

காங்கேசன்துறை பொதுநூலகம்

வலிகாமம் வடக்கு பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*நூல் விபரம்*

| | |
|---|---|
| நூல் | : காங்கேசன் முரசு - இதழ் 1 |
| தொகுப்பு | : வாசகர் வட்டம், காங்கேசன்துறை பொதுநூலகம். வலிகாமம் வடக்கு பிரதேச சபை |
| பதிப்பு | : 2018 |
| பக்கங்கள் | : 49 |
| கணனி வடிவமைப்பு | : கஜமுகன் பதிப்பகம், நல்லூர். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி | 01 |
| 2. | எமது தவிசாளரின் உள்ளத்திலிருந்து காங்கேசன் மலருக்காக...! | 02 |
| 3. | செயலாளர் இதயத்திலிருந்து... | 03 – 04 |
| 4. | என்னுரை | 05 |
| 5. | புத்தகசாலை ... | 06 |
| 6. | நூலக வரலாறு | 07 – 08 |
| 7. | மாணவர்களுக்கு வாசிக்கும் பழக்கத்தை கற்றுக் கொடுக்க முயற்சியுங்கள் | 09 – 10 |
| 8. | புத்தகங்களை பரிசளிப்போம்! வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்போம் | 11 – 12 |
| 9. | வாசிப்பில் பொது நூலகங்களின் பங்களிப்பு | 13 – 14 |
| 10. | சார்ல்ஸ் பாபேஜ் – கணினி பற்றிய தகவல்கள் | 15 – 16 |
| 11. | அட அப்படியா...! | 17 |
| 12. | ஹென்றி ஃபயோல் (1841–1925) | 18 – 20 |
| 13. | மருத்துவக் குறிப்புக்களைத் தாங்கி வந்த பழமொழிகள் சில | 21 |
| 14. | வாசிப்பு...! | 22 |
| 15. | வாசிப்பை நேசிப்போம்...! | 22 |
| 16. | பழந்தமிழரின் போர்க்கருவிகள் | 23 – 24 |
| 17. | நூலகமும் நாமும்...! | 25 |
| 18. | உலகின் முதல் நூலகம் | 26 – 27 |
| 19. | பொதுத் தகவல்கள் | 28 |
| 20. | ஊடகத்துறையும் தகவல் பரிமாற்றங்களும் | 29 – 30 |
| 21. | வலுவற்றவரின் வாழ்வில் வசந்தம் | 31 – 33 |
| 22. | தொம்புகளூடாக அறியப்படும் திருக்கோணேஸ்வரம் | 34 – 45 |
| 23. | உலகத் தேர்க்கலை நாயகன் கண்ட நீர்வேலி உலகநாயகியின் நவஸ்ரீசக்கர சிற்பத்தேர் | 46 – 47 |
| 24. | காங்கேசன்துறை பிரதேசத்திலிருந்து... | 48 |
| 25. | பொது அறிவுத் தகவல்கள் | 49 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த காங்கேசன்துறை பொது நூலகம் வெளியிடும் "காங்கேசன் முரசு" எனும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் ஆனந்தமடைகின்றேன். தென்னிந்திய காங்கேயன்டபட்டணத்திலிருந்து மாவிட்டபுரம் கந்தப்பெருமான் வந்து இறங்கிய துறைமுகப்பகுதியே காங்கேசன்துறை என மக்கள் நாமம் உச்சரித்தனர் என வரலாற்று நூல்கள் கூறுகின்றன. கடலலையின் தாலாட்டும் இயற்கை அழகும் பொருந்திய காங்கேசன்துறை மிகவும் பிரசித்தமான ஊராக விளங்கியது. நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் காங்கேசன்துறை பகுதி மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நிலை ஏற்பட்டது. தற்போது மீண்டும் காங்கேசன்துறை பழைய பொலிவை நோக்கி வீறுநடை போடுவதற்கு பலரும் முயற்ச்சி செய்கிறார்கள். பல நூறு மாணவர்கள் கல்வி கற்ற காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மீண்டும் துளிர் விடத்தொடங்கியுள்ளது. இந்நிலையில் காங்கேசன்துறை பொது நூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஆவண மலராக இம்மலரை வெளியிடுவது மிகவும் பாராட்டுக்குரியது.

மிகப் பழமைவாய்ந்த நூல் களஞ்சியமாக விளங்கிய இந்நூலகத்தை மீண்டும் கட்டி எழுப்பும் முயற்சியில் நூலக நிர்வாகமும் ஏனைய ஆர்வலர்களும் அக்கறை எடுத்து வருவது போற்றுதற்குரிய விடயமாகும். ஒரு கிராமத்தின் அறிவாலயமாக விளங்குவது நூல் நிலையங்களும் பாடசாலைகளுமாகும். பாடசாலைகள் ஒரு குறிப்பிட்ட வயதுடைய மாணவர்களுக்கு மட்டுமே ஆனால் பொது நூல் நிலையம் சிறுவர் முதல் மூத்தோர் வரை பயன்படும் உயரிய நிறுவனமாகும். அந்த வகையில் காங்கேசன்துறை நூல் நிலையம் என்றும் சிறக்க எல்லாம் வல்ல தெல்லிநகர் துர்க்காதேவியைப் பிரார்த்தித்து அனைவருக்கும் எனது நல்லாசிகளை சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.


கலாநிதி ஆறு திருமுருகன்,
தலைவர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தலைவர் சிவபூமி அறக்கட்டளை,
உப தலைவர் அகில இலங்கை இந்துமாமன்றம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது தவிசாளரின் உள்ளத்திலிருந்து”

## காங்கேசன் மலருக்காக...!

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் காங்கேசன்துறை பொதுநூலகத்தால் முதல் முறையாக வெளியிடப்படும் “காங்கேசன் முரசு” சஞ்சிகை எவ்வித தடங்கலுமின்றி தொடர்ச்சியாக வெளிவர வாழ்த்துவதோடு பேருவகை அடைகின்றேன்.

கடந்த காலங்களில் மாணவர்கள் மத்தியிலும் வாசகர்கள் மத்தியிலும் சிறந்த ஒரு நூலகமாக விளங்கிய எமது காங்கேசன்துறை பொதுநூலகம் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளில் பல்வேறு இழப்புக்களை சந்தித்து தற்போது மீளவும் செயற்படத் தொடங்கியுள்ளது. தற்காலிக வாடகைக் கட்டடத்தில் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் சுமார் 5000 புத்தகங்களுடன் தனது வாசகர்களுக்கும் அப்பகுதி மாணவர்களுக்கும் சிறப்பான சேவைகளை வழங்கி வருகின்றது.

தேசிய வாசிப்பு மாதத்தில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளையும் போட்டிகளையும் சிறப்பாக நடாத்தியுள்ளமை சிறப்பு அம்சமாகும். மேலும் வாசிப்பினுடைய முக்கியத்துவத்தையும் எமது பிரதேசத்தின் சிறப்புக்களையும் எடுத்தியம்பும் ஒரு ஆவணமாக தொடர்ச்சியாக வருடந்தோறும் வெளியிடும் நோக்கோடு முன்னெடுக்கப்படும் இந்நூல், இவ்வருடம் பல சிறப்பு கட்டுரைகளைத் தாங்கி வந்து வாசிப்பை சுவாசிக்க செய்யவுள்ளது. மாணவர் கல்வி கற்கும் போது தனித்து கல்வியில் மட்டும் ஆர்வம் காட்டாது ஏனைய துறைகளிலும் ஆர்வம் காட்ட வேண்டும். குறிப்பாக ஆராய்ச்சிகள், எழுத்தாக்கங்கள் போன்றவற்றையும் வளர்க்க ஊக்குவிக்கப்பட வேண்டும். அந்த வகையில் காலத்திற்கு காலம் சஞ்சிகை வெளியிடுவதன் அவசியத்தன்மையுள்ளது. காங்கேசன் முரசு சஞ்சிகையும் மாணவர்களின் பரந்த அறிவு, மேலதிக வாசிப்பு மற்றும் எழுத்தாக்கம், முற்போக்கு சிந்தனை, விமர்சன நோக்கு போன்றவற்றை வளர்க்க வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூல் வெளிவர உதவிய நூலகர், மற்றும் பிரதேச சபையின் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு சோ.சுகிர்தன்

கௌரவ தவிசாளர்,

வலிகாமம் வடக்கு பிரதேச சபை.


புத்தகங்கள்
இல்லாமல் புரட்சிகள்
சாத்தியமில்லை.

புத்தகப் புழுக்களால்
பூவும் பூப்பதில்லை
என்பதை இன்றைய
இளைய சமூகம்
உணர வேண்டும்.

“நூல்களின்
ஆதிக்கத்தை
அகத்தில் விதைத்து
புத்தக வாசிப்பு
என்னும் ஊக்கத்தை
உழைப்பாய்
தருவோம்!
வாழ்வில் உயர்வோம்!
நாளைய தலைமுறை
நல்லுலகம்
காணட்டும்
அறிவின் ஆற்றலை
அறிவியலும்
காணட்டும்.”

“புத்தகங்கள்
உறக்கம்
வருவதற்கல்ல
உறங்க விடாமல்
செய்வதற்கு...

“புத்தகங்களுக்கு
எப்போதும்
மரணம் கிடையாது.
அவை எப்போதும்
நம்மை விழிப்புடன்
இருக்க உதவுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளர் இதயத்திலிருந்து...

"நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" எனும் ஔவையார் முதுமொழிக்கிணங்க நாம் எந்த அளவிற்கு நூல்களை வாசிக்கின்றோமோ அந்த அளவிற்கு நமது அறிவு வளர்ச்சியடையும். அதற்கு முதுகெலும்பாகத் திகழ்வது நூலகங்களே. நூலகத்தில் நமது அறிவை வளர்க்கக்கூடிய பலதரப்பட்ட விடயங்கள் அடங்கியுள்ளன. வாழ்வியல், வரலாறு, இலக்கியம், மேற்கோள் நூல்கள், சிறுகதைகள், மனோதத்துவம், வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள், நாளிதழ்கள் என அனைத்து அம்சங்களையும் ஒரு நூலகம் கொண்டமைந்துள்ளது. நமது மொழி வளத்தைப் பெருக்குவதற்கும் வாசிப்பைச் சரளமாக்குவதற்கும் நூலகம் முக்கிய பங்காற்றுகின்றது. ஆரம்பப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை பயிலும் மாணவர்கள், கல்வியியலாளர்கள் என அனைத்து தரப்பினரும் நூலக வளங்களை எந்த வித தயக்கமுமின்றி பயன்படுத்தி வருகின்றனர்.

நம் நாட்டில் பொது நூலகங்கள், கல்விசார் நூலகங்கள், விசேட நூலகங்கள் என பல வகையான நூலகங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் பொது நூலகங்கள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை பேணிப்பாதுகாப்பதில் மிகவும் முக்கிய பங்காற்றுகின்றது. பொது நூலகத்தை நூலகம் அமைந்துள்ள சமூகம் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நமது அரசாங்கம் வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கப் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. வாசிப்பு மீதான பற்றினை அனைத்து தரப்பினரும் உணர வேண்டும், நூலகம் பற்றிய விழிப்புணர்வு அனைவரிடத்திலும் ஏற்பட வேண்டும் எனும் நோக்கில் "தேசிய வாசிப்பு மாதம்" கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் முழுவதும் தேசிய வாசிப்பு மாதமாக தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் இம்மாதத்தில் அரச அறிவுறுத்தல்களுக்கமைவாக அனைத்து நூலகங்களிலும் வாசிப்பில் ஆசை, ஆர்வத்தை ஏற்படுத்தும் முகமாக பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நூலகர் மற்றும் நூலக குழுக்கள் மூலம் வாசிப்பை மேம்படுத்தும் பல்வேறு நிகழ்வுகளை செயற்படுத்தி பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் எமது காங்கேசன்துறை பொதுநூலகமும் தேசிய வாசிப்பு மாதம் ஒக்டோபர் 2018 ஐ முன்னிட்டு பல்வேறு செயற்றிட்டங்களை மாணவர்கள் மற்றும் வாசகர்களிடையே நடாத்தியுள்ளது. அவற்றில் ஓர் அங்கமாக தொடர்ச்சியாக வெளியிடும் தீர்மானத்தோடு "காங்கேசன்" எனும் இச்சஞ்சிகையை வெளியிட்டுள்ளனர். அச்சஞ்சிகையானது சிறந்த பெறுபேற்றை வழங்க எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களை முதலில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாசிப்புப் பழக்கம் ஒரு மனிதனை மேம்படுத்தும். நூலகம் என்பது அறிவுத் திருக்கோயில், இங்கு வந்தவர்கள் மாணவர்களாக, கல்வியியலாளர்களாக, அறிஞர்களாக, பேரறிஞர்களாக உயர்கின்றனர். ஒரு நூலகத்தில் 50000 புத்தகங்கள் இருக்கின்றது என்றால் அங்கு 50000 அறிஞர்கள் இருக்கின்றார்கள் என்று பொருள் கொள்ளலாம். நூலகம் என்பது மனிதனின் மிகப் பெரிய சொத்தாகும். மனிதனை மனிதனாக்கும், அறிஞனாக்கும், விஞ்ஞானியாக்கும் திறன் நூலகத்திற்கு மட்டுமேயுண்டு.

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமாயின் முதலில் அவர்களின் இலக்கியத்தை அழிக்க வேண்டும் என்பார்கள். ஒரு நூலகம் திறக்கப்படும் போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன என்பது பொன்மொழி. தனிமையையும் கவலையையும் விரட்டுவது நூல்களாகும். எனவே சாலவும் நன்று எது? என்று கேட்டால் நூலகம் செல்வதே என்பது எனது கருத்து. ஆலயம் செல்வதும் வாழ்க்கைக்கு இன்றியமையாதது எனினும் மனிதனைப் பண்படுத்தும் நெறிப்படுத்தும் மகிழ்வூட்டும் அறிவுத்திறன் வளர்க்கும் நூலகம் செல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு, மற்றும் நூலகத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் வெளிவரும் காங்கேசன் சஞ்சிகை சிறப்பாக மலர ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு இ.பகீரதன் அவர்கள்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.

---

## நாம் விரும்பும் கோயில்

காலை என்றும் மாலை என்றும்
பின்னர் தோன்றும்
கறுப்பிருட்டுப் பொழுதென்றும்
காலம் -
ஓயா வேகமுடன் சுழலுகையில்
அந்த வேகம் விட்டுச் செல்கின்ற
சுவட்டுக்கெல்லாம்,
ஏதும் உண்டோ அர்த்தம்?
இது என்ன அர்த்தம்?

இவைகளை நாம் யோசித்துப்
பார்க்கும் போதில்;
எண்ணங்கள் எத்தனையோ
எங்கள் நெஞ்சாம் இருட்டறையில்
மின்னுவதை உணருகின்றோம்.
உண்மைகளின் பிள்ளைகளாய்
உயிரும் பெற்றே,
உலகத்தை ஆட்சி செய்யும்
வலிமை வாய்ந்த எண்ணங்கள் பலவற்றுள்
அருமையான இயல்புடைய அவற்றை எல்லாம்
திரட்டிக் கூட்டி,
வண்ணங்கள் பல தீட்டி வைத்தால்,
எங்கள் மன - அறைகள் நிரம்பாவோ?
நிரம்பும் தானே?

மனவறைகள் தோறும் யாம் மாற்றுயர்ந்த
மாணிக்கம் வயிரமணி,
மற்றும் உள்ள விலை உயர்ந்த இரத்தினங்கள்
சேகரித்தால்,
மேம்பட்டு விளங்காதோ எங்கள் செல்வம்?
தினசரிகள், சஞ்சிகைகள், கவிதைக்கோவை,
திருநெறிய பாசுரங்கள் என்றவாறாய்;
புனைகதைகள், காவியங்கள், நாவல்கள்,
பாட்டு, பொருள் பொதிந்த சங்கீதம்
என்றவாறாய் .....

திரவியங்கள் திரட்டி வைக்கும்
ஞானசோதித் திருக்கோயில் தான்,
நல்ல நூலகங்கள்.
பிறவி என்ற பேறு பெற்ற பலனை நல்கும்
பெட்டகங்கள் அடுக்கி வைத்த செல்வச்சாலை
உலகில் உள்ள நூலகங்கள்.

ஆதலாலே,
உலகினர்கள் நூலகத்தை நாடிச்சென்று,
தமது உரிமை எனத்தக்க அறிவை,
அன்பை, அறிவுணர்வை, திறமைகளை
அள்ளிக்கொண்டால்...
நூலகங்களால் விளையும் பயனை,
எங்கள் நுணுக்குணர்வின் முழுப்பலனை
நுகர்வோம் நாங்கள்...
காலமெல்லாம் நிலைத்து நிற்கும் அறிவுப்
பேற்றை,
கலைச்சுவைப்பு முழுத் திறனைப்
பெறுவோம் நாங்கள்,
சுவனல் மதி படைத்தோரின்
கோணலான கொக்கரிப்பும் வக்கரிப்பும்
மக்கிப் போக,
ஞான நிலை பொன்கதிர்கள் விரியலாகும்.
நாம் விரும்பும் கோயில்,
நூல் அகங்கள் ஆகும்.



கவிஞர்
இ. முருகையன்

---

எந்த ஆன்மீகப் புத்தகம் பிட்மேன் சுருக்கெழுத்து முறையிலும் (Pitman's Shorthand Script) அச்சடிக்கப்பட்டது - பைபிள்

"அரசியல், அரசாங்கம் ஆகியவை பற்றிய மிகப் பழமையான மற்றும் சிறந்த புத்தகம் - கௌண்டில்யர் / சாணக்கியர் எழுதிய அர்த்த சாஸ்திரம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

புத்தகப் பொக்கிசங்களாக விளங்கும் நூலகங்கள் பற்றி முன்னுரை எழுத வேண்டிய அவசியமில்லை. காரணம் நூலகங்களின் பயன்பாடும் தேவைகளும் நாம் எல்லோரும் அறிந்த விடயமாகும். மனிதர்கள் கல்வி கற்க வேண்டும் ஏனெனில் அவர்கள் மனிதர்கள் என்கின்ற ரஷ்ய பழமொழிக்கேற்ப எம்மைத் துலங்க வைப்பது அறிவுசார் கல்வி. அக்கல்விக்கு அடிப்படையாக அமைவது தேடலினூடான வாசிப்பு என்பது ஆய்வறிந்த உண்மை.

"வாசிப்பினால் மனிதன் பூரணமடைகின்றான்" என்பது ஆன்றோர் வாக்கு.

அந்த வகையில் வாசிப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து ஆண்டு தோறும் ஒக்டோபர் மாதம் முழுவதும், 2004 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை அரசின் அங்கீகாரத்துடன் இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையானது வாசிப்பு மாதமாகக் பிரகடனப்படுத்தி பொதுநூலகங்களினூடாக விழிப்புணர்வு நிகழ்வுகளை செயற்படுத்தி வருகின்றது.

நூல்களைத் தேடி வாசிப்பை நேசித்து கற்க வேண்டியவற்றை கசடு அறக் கற்று அறிவு படைத்தவர்களாக உயர உறுதுணையாக நிற்பவை பொதுநூலகங்களே. அந்த வகையில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் எமது பொதுநூலகமானது பல தடவைகள் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் வீழ்ச்சி கண்ட போதும் மீண்டும் எழுந்து நின்று தனது சேவைகளை வழங்கி வருகின்றது. பத்திரிகைப் பகுதி, சிறுவர் பகுதி, உடனுதவும் பகுதி, இரவல் வழங்கும் பகுதி என தனது சேவைகளை தனது வாசகர்கள் ஓரளவேனும் திருப்திப்படும் வகையில் தற்காலிக கட்டடத்தில் வழங்கி வருகின்றது.

மேலும் நாமும் எமது காங்கேசன்துறை பொதுநூலகத்தினூடாக இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினது அறிவுறுத்தல்களுக்கமைவாக பாடசாலை மாணவர்களிடையேயும் ஏனைய நூலக அங்கத்தவர்களிடையேயும் வாசிப்பின் அவசியத்தை கருத்தில் கொண்டு கட்டுரை, கவிதை, பேச்சு, சித்திரம், பொது அறிவுப் போட்டிகளை நடாத்தியுள்ளோம். மேலும் இச் செயற்பாடுகளின் பிரதான அம்சமாக காங்கேசன் முரசு சஞ்சிகை வெளியீடு அமைகின்றது. இச்சஞ்சிகையானது வாசிப்பின் முக்கியத்துவத்தையும் பொதுநூலகங்களின் முக்கியத்துவத்தையும் எமது பிரதேச கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களோடு தொடர்ச்சியாக வருடந்தோறும் வெளிவர வேண்டும். இம்முறை மிகவும் குறுகிய காலத்தில் இச்சஞ்சிகை வெளியீடு தொடர்பாக தீர்மானிக்கப்பட்டதால் பிரதேச முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் வரலாற்று சான்றுகள் தொடர்பாக எதுவும் பிரசுரிக்க முடியவில்லை. மேலும் மாணவர்களின் ஆக்கங்கள், நலன்விரும்பிகள், பிரதேச எழுத்தாளர்கள், கவிஞர்களின் ஆக்கங்கள் தொடர்ச்சியாக இடம்பெற வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

எம்மால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் காங்கேசன்துறை பிரதேச வாசகர்களுக்கும், மாணவர்களுக்கும் நூலகம் தொடர்பான விழிப்புணர்வையும், வாசிப்பின் மூலம் கிடைக்கும் நன்மைகள் தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் என்ற மேலான எண்ணக்கருக்களோடு, இம்மலர் வெளியிடப்படுகின்றது.


மேலும் எமது இச்செயற்றிட்டங்களுக்கு எதுவித மறுப்புமின்றி தகுந்த ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்குவித்த எமது பிரதேச சபையின் கௌரவ தவிசாளர், செயலாளர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், பொறுப்பதிகாரி மற்றும் சக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நூலகர்
திரு ம.பிரபாகரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகசாலை ...



தனித்தமைந்த வீட்டிற் புத்தகமும் நானும்
சையோகம் புரிந்ததொரு வேளைதன்னில்,
இனித்தபுவி இயற்கையெழில் எல்லாம் கண்டேன்;
இசைகேட்டேன்! மணம்மோந்தேன்!
சுவைகள் உண்டேன்!
மனித்தரிலே மிக்குயர்ந்த கவிஞர் நெஞ்சின்
மகாசோதியிற் கலந்த தெனது நெஞ்சும்!
சனித்ததங்கே புத்துணர்வு! புத்தகங்கள்
தருமுதவி பெரிது! மிகப்பெரிது கண்டீர்!
மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்வமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்,
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை;
புனிதமுற்று மக்கள் புது வாழ்வுவேண்டில்
புத்தக சாலைவேண்டும் நாட்டில்யாண்டும்.
தமிழர்க்குத் தமிழ்மொழியிற் சுவடிச்சாலை
சர்வகலா சாலையைப்போல் எங்கும் வேண்டும்.
தமிழிலிலாப் பிறமொழிநூல் அனைத்தும் நல்ல
தமிழாக்கி வாசிக்கத் தருதல்வேண்டும்,
அமுதம்போல் செந்தமிழிற் கவிதைநூற்கள்,
அழகியவாம் உரைநடையில் அமைந்த நூற்கள்,
சுமைசுமையாய் சேகரித்துப் பல்கலைசேர்
துறைதுறையாய் பிரித்தடுக்கி வைத்தல் வேண்டும்.
நாலைந்து வீதிகளுக் கொன்று வீதம்
நல்லதுவாய் வசதியதாய் இல்லம் வேண்டும்,
நூலெல்லாம் முறையாக ஆங்கமைத்து
நொடிக்குநொடி ஆசிரியர் உதவுகின்ற
கோலமுறும் செய்தித்தாள் அனைத்தும் ஆங்கே
குவிந்திருக்க வகைசெய்து தருதல் வேண்டும்.
மூலையிலோர் சிறுநூலும் புதுநூலாயின்
முடிதனிலே சுமந்துவந்து தருதல் வேண்டும்
வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும்
மரியாதை காட்டி அவர்க் கிருக்கை தந்தும்,
ஆசித்த நூல்தந்தும் புதிய நூல்கள்
அழைத்திருந்தால் அதையுரைத்தும், நாளும் நூலை
நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம்
நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும்
மாசற்றதொண் டிழைப்பீர்! சமுதாயச்சீர்
மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்!

பாவேந்தர் பாரதிதாசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலக வரலாறு

காங்கேசன்துறை பொதுநூலகத்தின் வரலாறு தொடர்பாக எமது குறுகிய கால தேடலில் குறிப்பிடத்தக்க சில தகவல்களை மட்டுமே சேகரிக்க முடிந்தது. எமது தேடலுக்கான தகவல்களை வழங்கியவர் காங்கேசன்துறை பொதுநூலகத்தின் முன்னாள் நூலகப் பொறுப்பாளர் கலாபூஷணம் வல்லிபுரம் குமாரசாமி அவர்கள். அவரால் அவரது காலப்பகுதிக்கான சில தகவல்களை மட்டுமே வழங்க முடிந்தது. மேலும் அவரது காலப்பகுதியில் நூலகம் தொடர்பான வரலாற்றுப் பதிவுகளை ஆவணப்படுத்தி நூலகத்தில் வைத்திருந்ததாகவும் கூறினார். எனினும் கடந்த கால அசாதாரண சூழ்நிலைகளில் சிக்கிய எமது நூலகம், அதனுடைய வரலாற்று சான்றுகளோடு பல அரிய நூல்களையும் இழந்துள்ளமையை அவரது கருத்துக்களினூடாக அறிய முடிந்துள்ளது.

1976 ஆம் ஆண்டு நூலக உதவியாளராக இணைந்து கொண்ட அவருடைய காலப்பகுதியில் நூலகம் காங்கேசன்துறையிலுள்ள தற்போதைய பிரதேச சபைக் கட்டடத்திற்கு தென்மேற்கு மூலையில் அமைந்திருந்ததாகவும் ஒரு அறையுடன் கூடிய கட்டடத்தில் நடாத்தப்பட்டதாகவும் தெரிவித்தார். ஆரம்ப காலத்தில் சுமார் 300 நூல்களுடன் நூலகம் இயங்கியதாகவும் தெரிவித்தார். அத்தோடு பத்திரிகைகள் பகுதியும் செயற்பட்டதாகவும் தினசரி காலை முதல் நண்பகல் வரையே நூலகம் செயற்பட்டு வந்ததாகவும் கூறினார். இக்காலப்பகுதியில் தனக்கு மாதாந்த வேதனமாக ரூபா 75.00 வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

1979.01.01 இல் திரு க.ஜெயபாலசிங்கம் அவர்கள் தவிசாளராக இருந்த காலத்தில் தனக்கு நூலகப் பொறுப்பாளராக பதவியுயர்வு வழங்கப்பட்டதோடு, நூலகம் முழுநேரமும் அதாவது காலை தொடக்கம் மாலை வரை செயற்பட்டதாகவும் தெரிவித்தார்.

அதன் பின்னர் திரு க.சண்முகநாதன் அவர்கள் செயலாளராக இருந்த காலத்தில் (சரியான ஆண்டு ஞாபகத்தில் இல்லை) வாசகர்களின் தொகை அதிகரிப்பிற்கேற்ப நூலகத்தை விஸ்தரிக்க வேண்டிய தேவையேற்பட்டது. அதனடிப்படையில் அவரது முயற்சியால் தற்போது காங்கேசன்துறையிலுள்ள மாடிக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். அதன் பின்னர் சடுதியாக அதிகரித்த வாசகர் தொகை 300 ஐ எட்டியது. வாசகருக்கேற்ப நூல்களின் தொகையை அதிகரிக்க வேண்டிய தேவை தமக்கு ஏற்பட்டதாகவும், செயலாளரின் அனுமதியுடன் நூலகப் பொறுப்பாளரான தானும் அப்பகுதி வாசகர்கள் சிலரும் இணைந்து காங்கேசன்துறை முதல் யாழ்ப்பாணம் வரை நூல் சேகரிப்பில் ஈடுபட்டதாகவும் தெரிவித்தார். அப்பகுதி வர்த்தகர்கள் தமக்கு பெரிதும் உதவியதாகவும் தெரிவித்ததோடு நூல்களின் தொகை சுமார் பத்தாயிரத்தை (10000) எட்டியதாகவும் தெரிவித்தார்.

தனக்குப் பின்னர் திரு வித்தியாசாகரன், திருமதி கருணாநிதி ஆகியோர் நூலகர்களாக கடமையாற்றியதாகவும் தெரிவித்த அவர் தனது சேவைக்காலத்தின் இறுதியில் காங்கேசன்துறை நூலகம் தனது வளங்களில் பலவற்றை இழந்த நிலையில் மல்லாகத்தில் இயங்கியதாகவும் தெரிவித்தார்.

மல்லாகத்தில் இயங்கிய எமது நூலகம் தற்போது மாவிட்டபுரம் பகுதியில் தனியாருக்கு சொந்தமான வீடு ஒன்றில் தற்காலிகமாக இயக்கப்பட்டு வருகின்றது. தற்போது நூலகத்தில் 5000 நூல்கள் உள்ள நிலையில் வாசகர்களின் தொகை மிக மிகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவாகவே காணப்படுகின்றது. சராசரியாக தினசரி பத்திற்கும் குறைந்த வாசகர்களே வருகை தருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். இதற்கு முக்கிய காரணம் எமது சொந்த இடத்தில் நூலகம் இயங்காமையேயாகும். தற்போது இயங்கும் கட்டடத்திற்கு அண்மையில் தெல்லிப்பளை பொதுநூலகம் அமைந்துள்ளமையும் எமது நூலகத்திற்கு வாசகர் வருகை குறைவிற்கு ஒரு காரணமாகும். மேலும் எமது பகுதி வாசகர்கள் இங்கு வந்து நூல்களை பெற்றுச் செல்வதில் காணப்படும் போக்குவரத்து சிரமங்களும் முக்கிய காரணமாகும்.

எமது நூலகம் சார்ந்த தகவல்கள், வரலாற்று சான்றுகள், புகைப்படங்கள் வைத்திருப்போர் தயவு செய்து நூலகத்திற்கு வழங்கி நூலக வரலாற்றை இன்றைய இளைய சமுதாயம் அறிந்து கொள்ள ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி

நூலகர்.

---

உலகிலேயே அச்சடிக்கப்பட்ட மிகச்சிறிய புத்தகம்

1. Old King Cole – ஒரு சிறுவர் புத்தகமாகும். 1 X 1 மி.மீ (0.04 அங்குல அகலம்) 1985 இல் ஸ்ட்ராத்க்ளைட், ஸ்கொட்லாந்தில் வெளிவந்தது. இதன் சிறப்பு என்னவெனில் இதன் பக்கங்களை திருப்ப ஒரு ஊசி முனையைப் பயன்படுத்த வேண்டும்.
2. The World's Smallest Book என்ற புத்தகம் 2.4 X 2.9 மி.மீ ஜோஷ்வா ரிச்செர்ட் என்ற ஜெர்மனியரால் வெளியிடப்பட்டது. இதைப் படிப்பதற்கு ஒரு பூதக்கண்ணாடி பயன்படுத்தப்பட வேண்டும்.

"இலக்கியத்தின் லிங்கன்" Lincoln of Literature என்று அழைக்கப்படும் பிரபல எழுத்தாளர்
மார்க் ட்வைன் (Mark Twai) அமெரிக்க எழுத்தாளர்,
இயற்பெயர் - சாமுவேலாங்ஹார்ன் க்ளெமென்ஸ்."

---

## மாதகல் மயில்வாகனப் புலவர்

மயில்வாகனப் புலவர் ஏறக்குறைய நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னே யாழ்ப்பாணத்து மாதகல் என்னுமூரிலே பிறந்தவர். இவ்வூர்ப் பிறந்த சிற்றம்பலம் புலவரது சகோதரி புதல்வர். ஞவயா என்னும் புலவரது மரபில் உதித்தவர்.

இவர் இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த கூழங்கைத் தம்பிரானிடம் வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலைப் புதிதாகக் கட்டுவித்த வைத்திலிங்கம் செட்டியாரோடு ஒருங்கு கற்றவர்

"ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதம்"

---

## மல்லாகம் வி.கனகசபாபதிப்பிள்ளை (1855 – 1906)

மல்லாகம் விசுவநாதபிள்ளையவர்கள் புத்திரர் வி.கனகசபாபதிப்பிள்ளை சென்னையிலே அஞ்சற்றுறையிலே பெரும் பதவி வகித்தவர். 1904 ஆம் ஆண்டு இவர் முன்பு ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகள் நூலுருவம் பெற்றது. "ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்" என்ற பெயருடன் ஆங்கிலத்தில் வெளிவந்தது. இந்நூல் ஆங்கிலம் கற்ற தமிழரிடையே விழிப்பினை ஏற்படுத்தியது

"நாவலர் மாநாடு - விழா மலர் 1969"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு வாசிக்கும் பழக்கத்தை கற்றுக் கொடுக்க முயற்சியுங்கள்!

திரு சு.தியாகராசா,
முகாமைத்துவ உதவியாளர் - 11
வலி.வடக்கு பிரதேச சபை

படிப்பு என்றவுடன் பாடப்புத்தகங்கள் தான் மாணவர்களின் நினைவிற்கு வரும். ஆனால் அவற்றிற்கும் மேலதிகமாக படிக்க வேண்டிய விடயங்கள் ஏராளம் இருக்கின்றன. புத்தகங்களை வாசிப்பது என்பது அவர்களுக்கு கூடுதலான பலத்தைத் தரும். உங்களின் பிள்ளைகளுக்கு வாசிக்கும் பழக்கத்தை முதலில் ஏற்படுத்துங்கள். குழந்தைகளின் மூளை 6 முதல் 10 வயதுக்குள் வேகமான வளர்ச்சி அடையும். அந்த வயதில் அவர்கள் பழகும் எந்த ஒரு செயலையும் எளிதில் கற்றுக் கொள்ள முடியும்.

**வாசிக்கும் பழக்கத்தை அன்றாட பணிகளில் ஒன்றாக மாற்ற, பெற்றோர்கள் செய்ய வேண்டிய அடிப்படை விடயங்கள்**

- குழந்தைகள் பொதுவாக விளையாட்டில் ஆர்வமுடையவர்களாக இருப்பார்கள், அவர்களுக்கு ஒரே நாளில் வாசிப்பு பழக்கத்தை ஏற்படுத்தி விடமுடியாது. அவர்களின் கவனத்தை சிறிது சிறிதாக வாசிப்பில் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும்.
- முதலில் படங்கள், பாடல்கள், பெரிய எழுத்துக்கள் உடைய புத்தங்களை வாங்கி கொடுத்து, அதில் இருக்கும் அடிப்படையான தகவல்களை, கதைகளை வாசிக்க சொல்லலாம்.



- குழந்தைகளுக்கு வாங்கி கொடுக்கும் புத்தங்களை கொஞ்சம் வித்தியாசமாக, வண்ணத்துணியில் வடிவமைக்கப்பட்ட புத்தகம், அட்டையில் வடிவமைக்கப்பட்டது, அனிமேஷன் புத்தங்கள் என பல்வேறு வடிவங்களில் வாங்கி கொடுத்து அவர்களை வியப்புக்குள்ளாக்கினால் அவர்கள் அந்தப் புத்தகத்தை படிக்க ஆரம்பித்து விடுவார்கள்.
- உங்கள் குழந்தையின் வயதுக்கு ஏற்ற புத்தகங்களை வீட்டில் வாங்கி வைப்பது அவசியம். குழந்தையின் பிறந்தநாள், அவர்களின் சிறந்த செயலுக்கு பாரட்டு, போன்ற சூழலில் அவர்களுக்கு புத்தகங்களை பரிசாக கொடுங்கள். அந்தப் புத்தகத்தை வாசிக்க சொல்லி அவர்கள் கூறும் தகவலைப் பொறுமையாக கேட்டு அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- வீட்டில் இருக்கும் பெரியவர்கள் புத்தகங்கள் அல்லது பத்திரிகை படிக்கும் போது அதிலுள்ள விடயங்கள் பற்றி குழந்தைகளிடம் பேச வேண்டும், அதில் இருக்கும் படங்களைப் பார்க்கச் சொல்ல வேண்டும் அல்லது புத்தகத்தில் உள்ள கதையின் அரைப் பகுதியையோ, தகவலையோ அவர்களை ஈர்க்கும் விதமாக கூறிய பின்னர் மீதி இருக்கும் தகவலை அல்லது கதையை நீயே படித்து தெரிந்துகொள் எனக் கூறுங்கள்.
- குழந்தைகள் தினமும் ஒரு கதை மற்றவர்களுக்கு சொல்லும் பழக்கத்தை உருவாக்குங்கள். மேலும் அவர்கள் படித்த புத்தகத்தின் முடிவை மாற்றி எழுத சொல்லிப் பாராட்டலாம் அல்லது ஆர்வம் தரும் வகையில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சிக்கலாம். உங்கள் பகுதியில் இருக்கும் நூலககத்தில் அவர்களை உறுப்பினராக்கி தினமும் ஒருமணி நேரமாவது நூலகம் செல்வதை அவர்களுக்குப் பழக்கப் படுத்துங்கள். குழந்தைகளுக்கு அகல வடிவிலான புத்தகங்களை வாங்கி கொடுப்பதை தவிர்த்து, அவர்கள் எளிதில் கையாளக் கூடிய வகையில் நீள வடிவிலான புத்தகங்களை வாங்கி கொடுக்கலாம். குழந்தைகளுக்கு கதை சொல்லும் போது கதைப் புத்தகத்தை உங்கள் கையில் வைத்துக் கொண்டு அதில் வரும் படங்களை அவர்கள் பார்க்கும் படி செய்யலாம். இதனால் வாசிப்புத் தன்மை அதிகரிப்பதுடன் அவர்களின் கற்பனைத் திறனும் வளரும். இறுவட்டுடன் (CD's) கூடிய கதைப் புத்தகங்கள் வாங்கிக் கொடுத்து, முதலில் புத்தகத்தை படிக்கச் சொல்லுங்கள். பின் CD யைப் பார்க்க சொல்லுங்கள். இதனால் அவர்களுக்கு புரிதல் தன்மையும் அதிகரிக்கும்.



---

**நீலாவணன்**



பிறப்பு : சின்னத்துரை, மே 31, 1931
பெரிய நீலாவணை, (முன்னர் மட்டக்களப்பு)

இறப்பு : ஜனவரி 11, 1975
பெரிய நீலாவணை, (அம்பாறை மாவட்டம்)

தேசியம் : இலங்கைத் தமிழர்

வேறு பெயர்கள் :
நீலா – சின்னத்துரை, அம்மாச்சி ஆறுமுகம், கொழுவுதுறட்டி, வேதாந்தி, எழில்காந்தன் இராமபாணம், சின்னான் கவிராயர்.

பணி : ஆசிரியர்

அறிமுகம் : கவிதை, சிறுகதை, குறுங்கதை, சிறுவர் கவிதை, நகைச்சுவை உரைநடைச் சித்திரங்கள்

சமயம் : இந்து சமயம்

**உலகில் முதன்முதலில் அச்சடிக்கப்பட்ட புத்தகம்**

ஹறிகா சூத்ரா, ஒரு சமஸ்கிருத ஆய்விலிருந்து சீன மொழியில் எழுதப்பட்ட புத்தகமாகும். கி.பி 868 இல் அச்சடிக்கப்பட்டதாக அறியப்படுகின்றது. டையமண்ட் சூத்ரா எனவும் அழைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகங்களை பரிசளிப்போம்!

# வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிப்போம்!

திரு ப.மகேசன்
முகாமைத்துவ உதவியாளர் - 111
வலி.வடக்கு பிரதேச சபை.

புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம், அதுவும் தமிழ் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் மிகக் குறைந்துகொண்டே வருகிறது. சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில், ஆறாம் / ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் தமிழ்மொழியைப் படிக்கத் திணறுவது தெரிய வந்துள்ளது. தமிழில் எத்தனை படைப்புகள், எத்தனை தரமான எழுத்தாளர்கள், எத்தனை அறிவு பொருந்திய விடயங்கள் புதைந்துள்ளன.

இது மட்டுமன்றி, புத்தகங்களை குழந்தைகள் தொடர்ந்து படிப்பதன் மூலம் இன்றியமையாத பல உன்னத நலன்களை பெற்றுக்கொள்ள முடியும். புத்திக் கூர்மை, அறிவு, சமச்சீரான எண்ண ஓட்டம், ஆழ்ந்த உறக்கம், சகிப்புத் தன்மை, எண்ணத்தில் உறுதி போன்ற நலன்களை புத்தக வாசிப்பின் மூலம் பெறுகின்றனர்.

ஜோகன்டிக்கின்ஸ் என்பவர் "broken the hell" என்ற புத்தகத்தை தேடி, பன்னிரண்டு ஆண்டுகளாக *16,000* கி.மீக்கு மேலாக அலைந்து திரிந்திருக்கிறார். அந்த பன்னிரெண்டு ஆண்டுகளில் டிக்கின்ஸ் குடும்பம், உறவு, பணம், சந்தோசம் என வாழ்வின் ஒரு அத்தியாயத்தையே தொலைத்திருந்தார். ஆனால் அந்த புத்தகத்தை கண்டு பிடித்த தருணத்தில் உலகையே வென்றவரைப் போல் ஆனந்தப்பட்டார். இந்த மகத்தான பிரதியை அச்சாக்கி, இனிவரும் தலைமுறையினருக்கு கொடுத்து விட முடியும் என்பதை விட வேறென்ன சந்தோசம் இருந்திருக்கும் அவருக்கு வாழ்வில்?

புத்தகங்கள் நம் வாழ்க்கையை புரட்டிப் போட்டு விடும். காரல்மார்க்ஸின் ஒரு புத்தகம் உலக வரலாற்றையே மாற்றி இருக்கிறது. திருவள்ளுவரின் திருக்குறள், மானுடப் பண்புகளை உலகெங்கிலும் விதைத்திருக்கிறது. டால்ஸ்டாயின் ஒருநூல் மகாத்மாவை உலகம் போற்றும் உன்னதத் தலைவராக்கி இருக்கிறது. ஒரு புத்தகமும், அதன் வாசிப்பும் நமக்கு ஆயிரம் ஆயிரம் கண்களையும் செவிகளையும் கொடுத்து, அறிவின் விசாலப் பாதையில், உலகின் ஏதோ ஒரு மூலைக்கு கொண்டு சென்று விடுகிறது.

மொட்டைமாடியின் குட்டிச் சுவரில் உட்கார்ந்து படித்து கொண்டிருக்கும் நம்மை, விக்கிரமாதித்தன் காலத்திற்கும், ஈழத்தின் போர்ச் சத்தங்களுக்கும் நடுவே தன் அம்மாவைத் தேடி அலையும் குழந்தையின் பரிதவிக்கும் மனநிலைக்கும் கொண்டு சென்று விடுகிறது. நம்மால் போக முடியாத இடத்திற்கெல்லாம் புத்தகம், அதன் சாளரத்தின் வழியே நம்மைக் கூட்டிச் செல்கிறது.

நம் கைக்கு எட்டும் தூரத்தில் எவரெஸ்ட் சிகரத்தை கொண்டு வந்து நிறுத்தும். நம் காலுக்கடியில் கங்கையை ஓட விடும். தேயிலைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டங்களில், ஏகாதிபத்தியத்தின் வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கும் எவனோ ஒருவனுக்காக நம்மை தேம்பி தேம்பி அழ வைக்கும்.

அடுத்தவர் மீதான அன்பையும், பாசத்தையும் கரிசனத்தையும், சகோதரத்துவத்தையும் விதைக்கும். புத்தக வாசிப்பு சேகுவேராவுக்கும் பிடல்காஸ்ட்ரோவுக்கும் சலாம் போட வைக்கும்.



"அலெக்ஸாண்டர் இந்தியாவின் மீது படையெடுத்த போது, இங்கு எழுதப்பட்ட நூல்களை எடுத்து வரும்படி அந்நாட்டு அறிஞர்கள் கேட்டு கொண்டார்களாம்."

புத்தகங்களை உருவாக்காத தலைமுறை உலகை மேம்படுத்தாது. புத்தகம் புரட்சியை உண்டு பண்ணும். கோடான கோடி மனிதர்களின் இதயங்களில் பட்டாம்பூச்சிகளாக பறக்கவிடும். புத்தகம் ஒரு நல்ல நண்பன். படிக்க நேரம் ஒதுக்குவோம். புத்தகத்திற்கு பணம் ஒதுக்குவோம். அப்போது தான் இந்த உலகம் நம்மை ஒதுக்காமல் இருக்கும். குழந்தைகளுக்கு நல்ல அறிவு சார்ந்த புத்தகங்களை பரிசளித்து அவர்களை படிக்க செய்யலாம். எதிர்கால தலைமுறை வாசிப்பு பழக்கம் இல்லாமல் வளர்வது சமூகத்தை பின்னோக்கி இழுத்துச் சென்றுவிடும். இன்றே உங்கள் குழந்தைகளுக்கு வாசிப்பு பழக்கத்தை உருவாக்கும் முதல் அடியை எடுத்து வையுங்கள். குழந்தை விரும்பும் ஒரு அழகிய புத்தகத்தை அவர்களுக்கு பரிசளியுங்கள்.



ஜப்பானில் உள்ள பேருந்து நிறுத்தம்

**"ஷேக்ஸ்பியரின் மிகச் சிறிய நாடக எழுத்து வடிவம்**
The Comedy of Errors"

**"புத்தகங்கள் வெளியிடுவதில் முதல் இடத்தில் உள்ள நாடு – சீனா, இந்தியா பத்தாவது நிலை."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பில் பொது நூலகங்களின் பங்களிப்பு

பொ.றொசானி
தரம் - 11
யா / மயிலிட்டி வடக்கு கலைமகள் மகா வித்தியாலயம்

மொழியாற்றலில் முன்னேற்றம் காண்பதற்கு முதனிலையாகவும் முதன்மை நிலையாகவும் வாசிப்பு அமைகின்றது வாசிப்பு மனிதனை பூரணமாக்குகின்றது என்றார் அறிஞர் பேக்கன் அவரது கூற்றிற்கமைய நாம் ஓய்வு நேரத்தை புத்தகங்கள் வாசிப்பதில் செலவிட வேண்டும் வாசிப்பதற்கேற்ற நல்ல நல்ல புத்தகங்களை நூலகங்களில் தான் பெருமளவில் காணலாம் ஆறு இல்லாத ஊருக்கு அழகு பாழ் என்பது பழமொழி நூல்நிலையம் இல்லாத ஊருக்கு அறிவு பாழ் என்பது புதுமொழி.

நூலகத்தின் சிறப்புக்கு அங்குள்ள நூல்களே சான்றாகும் ஊர் தோறும் நூல் நிலையங்கள் தோன்றுமாயின் நூல்களைப்படிப்போர் தொகை பெருகும் மக்கள் தம் அறிவும் வளரும் இதனால் தான் நம்முன்னோர்கள் ஊர் தோறும் நூலகங்கள் தோன்ற வேண்டும் என்று கூறினார்கள். செல்வம் மிக்கவர்கள் எல்லா நூல்களையும் பணம் கொடுத்து வாங்க முடியும் ஏழ்மை நிலையில் உள்ளோர் நூல்களை பணம் கொடுத்து வாங்க முடியாது அவர்கள் நல்ல நூல்களை கற்றிட பொது நூலகங்கள் உதவுகின்றன பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் நூல் நிலையங்கள் உள்ளன இருந்தும் மேலதிக வாசிப்புக்கு உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கி நடாத்தும் பொது நூலகங்கள் உள்ளன பொது நூலகங்கள், பாடசாலை நூலகங்கள், சிறுவர் நூலகங்கள், ஆய்வுத்துறைக்குப் பயன்படும் ஆராய்ச்சி நூலகங்கள், நடமாடும் நூலகங்கள் என பலவகையான நூலகங்கள் உள்ளன.

ஓய்வு நேரங்களை நல்ல பயன் முறையில் பயன்படுத்துவதற்கு நூலகங்கள் பெரிதும் உதவுகின்றன புதிய விடயங்களை அறிந்து கொள்வதற்கு நூலகங்கள் பெரிதும் உதவுகின்றன புதிய விடயங்களை அறிந்து கொள்ளவும் நமது அறிவை வளர்த்துக் கொள்ளவும் நூல்கள் பெரிதும் பயன்படுகின்றன தேன் இருக்கும் இடத்தினைத் தேடி வண்டுகள் செல்வது போல நல்ல நூலகள் இருக்கும் நூலகங்களை நாடி நாம் செல்ல வேண்டும்.

பாடசாலை நேரம் தவிர்ந்த ஓய்வு கிடைக்கும் நேரங்களில் பொது நூலகங்களுக்குச் சென்று வாசிப்பதன் மூலம் எமது மொழியாற்றல் விருத்தியடைகின்றது. முறையான மொழியாற்றல் கைவரப் பெற்ற மாணவனின் பேச்சிலே தெளிவும் கருத்தாழமும் காணப்படும் உள்ளக்கனி நெல்லிக்கனி போல எந்தக்கருத்தையும் தெளிவாக பிறர் விளங்கிக்கொள்ளுமாறு உரைப்பான் அவனது எழுத்து நடை எளிமையும் இனிமையும் தெளிவும் கருத்தாழமும் வழுவின்மையும் கொண்டதாய்ப் பொலிவுறும் வாசிப்பு பழக்கம் பெற்ற மாணவன் ஒருவனுடைய கட்டுரையையும் ஒப்பிட்டு நோக்கின் இவ்வுண்மை புலனாகும்.

பலவகை நூல்களை கொண்டிருக்கும் இத்தகைய நூலகங்களில் நமது விருப்பத்திற்கு ஏற்றபடி தேர்ந்தொடுத்துப் படித்திட நாம் பழகுதல் வேண்டும் வெறும் பொழுது போக்குக்குரிய நூல்களை மட்டும் வாசிக்காது வாழ்க்கைக்கு பயன்தரும் நூல்களை கற்றிட முற்பட வேண்டும் அன்னப்பறவையானது நீரை விலக்கிப் பாலை மட்டும் பருகுதல் போன்று மாணவர்கள் தேவையற்ற நூல்களை விலக்கிவிட்டுத் தேவையான பொருத்தமான பயன் தரும் நூல்களை மட்டும் வாசித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகங்கள் என்ற வரிசையில் யாழ்ப்பாணம் பொது நூலகம் யாழ் மக்களின் அறிவுப்பொக்கிஷமாகத் திகழ்ந்தது. ஆசியாவிலே மிகப்பெரிய நூலகமாகக் கருதப்பட்ட இந்நூலகம் பல்துறை சார்ந்த ஏராளமான நூல்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது இன்று காணப்படும் பொழுது போக்கு அம்சங்கள் அன்று இல்லை ஓய்வு கிடைத்தால் பொது நூலகங்களையே நாடிச் செல்வர் அதனால் யாழ் மக்கள் அறிவில் சிறந்தவர்களாகத் திகழ்ந்தார்கள் இந்த அறிவு வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த யாழ்ப்பாணம் பொது நூலகம் திட்டமிட்டு எரிக்கப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன காய்க்கும் மரம் தானே கல்லெறிக்கு இலக்காகும்.

அறிவு வளர்ச்சிக்கு சக்தியை கொடுக்கும் பொது நூலகங்கள் மாணவர்களின் திறன்களை வெளிப்படுத்தவும் உதவுகின்றன அந்த வகையில் கட்டுரைப் போட்டி கவிதைப் போட்டி பேச்சுப் போட்டி சமய அறிவுப் போட்டி பண்ணிசைப் போட்டி போன்ற பல்வேறு போட்டிகளை நிகழ்த்தி மாணவர்களுக்கு ஊக்கம் கொடுக்கின்றன போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கின்றன இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் பொது நூலகங்கள் பாராட்டுக்குரியன போற்றுதற்குரியன.

எனவே வாசித்து அறிவைப் பெருக்குவதற்கு முக்கிய இடமாகத் திகழ்கின்ற பொது நூலகம் ஓர் ஆய்வுக்கருவூலம் வாசிக்கும் போது தான் எமது அறிவு வளரும் இந்த உண்மையை நன்கு உணர்ந்த நாமனைவரும் நூலகங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும் குறிப்பாக மாணவர்கள் ஓய்வு நேரங்களை நூலகத்திற் கழித்திட முன்வர வேண்டும் அதன் மூலம் அவர்களது அறிவு பெருகும் நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன் தரும் நல்ல பிரசைகளாக உருவாக வழி பிறக்கும்.

## சுவாமி விபுலானந்தர்



**பிறப்பு : மயில்வாகனம் சின்னத்தம்பி**
**மார்ச் 27, 1892, காரைதீவு, இலங்கை.**
**இறப்பு : ஜூலை 19, 1947, அகவை 55**
**இறப்பிற்கான காரணம் : சுகயீனம்**
**கல்லறை : சிவானந்த வித்தியாலயத்தில் உள்ளது.**
**தேசியம் : இலங்கைத் தமிழ்**
**கல்வி : இளமானி**
**(அறிவியல், இலண்டன் பல்கலைக்கழகம்)**
**பணி : பேராசிரியர்**
**பணி புரிந்த இடங்கள் :**
**இலங்கைப் பல்கலைக்கழகம்,**
**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்**
**அறிமுகம் : தமிழிசை ஆய்வாளர், பண்டிதர்,**
**நூலாசிரியர்,**
**இந்து மறுமலர்ச்சியாளர்.**
**சமயம் : இந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சார்ல்ஸ் பாபேஜ்



கணினியின் தந்தை எனக் கூறப்படும் Charles Babbege (1791 – 1871) பிரித்தானிய கணிதவியலாளர், கண்டுபிடிப்பாளர், இன்றைய கணினிகளில் பயன்படுத்தப்படும் எந்திர கணக்கியல் இயந்திரங்களை கண்டு பிடித்தவர். 1837 இல் முதன் முதலில் முழுமையான செய்நிரல் கணினியை (Programmable Mechanical Computer) வடிவமைத்தவர்.

### இரண்டாவது தலைமுறை கணினி

கி. பி. 1959 -1964 வரையிலான காலப்பகுதியில் அறிமுகப்படுத்திய கணினிகள் இரண்டாம் தலை முறையைச் (Second Generation) சேர்ந்ததாகும். இக்காலப்பகுதியில் அமைக்கப்பட்ட கணினிகளுக்கு திரிதடையம் (Transistor) பயன்படுத்தப் பட்டது. Transistor ஆனது Vacuum Tube ஆனது முற்றிலும் மாறுபட்ட தொழில் நுட்பத்தை கொண்டிருந்தது. இது அளவில் சிறியதாகவும், வேகமாகவும், நம்பகமானதாகவும், குறைந்த விலைகளிலும் தயாரிக்கக் கூடியதாகவும் இருந்தது. இதனை Jhon Bardeen, William Shockley, Walter Brattain என்பவர்கள் கண்டுபிடித்திருந்தனர். இந்தக் கணினிகளில் இயந்திர மொழி (Machine Level Language) மட்டுமன்றி assembly language உம் பயன்படுத்தப்பட்டன.




Jhon Bardeen



William Shockley



Walter Brattain



தொகுப்பு:
சி.சிறீஸ்கந்தராஜா
நூலக உதவியாளர்

### மூன்றாவது தலைமுறை கணினி

கி. பி. *1965 - 1971* வரையிலான காலப்பகுதிகளில் அறிமுகப்படுத்திய கணினிகள் மூன்றாம் தலைமுறையைச் (*Third Generation*) சேர்ந்ததாகும். இக்காலத்தில் அறிமுகப்படுத்திய கணினிகளில் ஒருங்கிணைச் சுற்று (*Integrated Circuit*) எனும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது.


இக்கணினிகளில் மிக அதிகமான திரிதடயதிற்கு (*Transistor*) பதிலாக ஒரு ஒருங்கிணைச் சுற்று (*Integrated Circuit*) பயன்படுத்தப்பட்டது. இதனால் கணினியின் அளவு சிரியதாக்கப்பட்டதுடன் மின்சார பாவனையளவும் குறைக்கப்பட்டது.

ஒருங்கிணைச் சுற்று (*Integrated Circuit*) ஆனது செயல் திறன் அதிகமானதாகும். இன்றைய இலத்திரனியல் சாதனங்களில் ஒருங்கிணைச் சுற்று (*Integrated Circuit*) பயன்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இதனை ராபர்ட் நய்ஸ் (*Robert Noyce*) உம் ஜாக் கில்பி (*Jack Kilby*) உம் இணைந்து கண்டுபிடிதிருந்தனர். மேலும் இந்த தலை முறைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் *High Level Language* என்ற நவீன பயன்பாட்டு மொழி அறிமுகம் செய்யப்பட்டது.

Robert Noyce Jack Kilby

**நான்காம் தலைமுறை கணினி**

கி. பி. *1971* முதல் தற்போது வரை உள்ள கணினிகள் அனைத்தும் நான்காம் தலைமுறையைச் (Fourth Generation) சேர்ந்ததாகும். இதில் நுண்செயலி (Microprocessor) எனப்படும் தொழில்நுட்பம் பயன்படுத்தப் படுகின்றது. இன்டெல் (*Intel*) நிறுவனத்தில் பணி புரிந்த டேட் ஹோப்ப் (Ted Hoff) என்பவர் தான் இதனைக் கண்டுபிடித்தார். இது ஒருங்கிணைச் சுற்றை (Integrated Circuit) விட மிக அதீத திறன் கொண்டதாக நுண்செயலி (*Microprocessor*) விளங்குகின்றது.

Ted Hoff

**ஐந்தாம் தலைமுறை கணனி**

ஐந்தாம் தலைமுறை என்பது புதிய தொழில்நுட்ப முறையிலான கணினிகளைக் குறிக்கின்றது. இது இன்றைய அதி நவீன கணினிகளைக் காட்டிலும் இவை சிறந்தவையாக காணப்படும். இவற்றால் சுயமாக சிந்திக்க



முடியும். இவற்றிக்கு Keyboard, Mouse, போன்ற பாகங்கள் அவசியமில்லை. இவற்றின் *Monitor* தொடு தன்மை (Touch *Screen*) உடையன.

இவ்வகையான கணினிகளை Surface *Computer* என அழைக்கப்படும்.

---


**"புத்தகங்களை விரும்புபவர்களை ஆங்கிலத்தில் Bibliophile, என்று அழைப்பர். சாதாரண பேச்சு வழக்கில் Bookworm புத்தகப் புழு என்பர்."**

**"ஜேர்மனியின் நாசித் தலைவர் ஹிட்லரின் சுயசரிதை - "மெய்ன் காம்ஃப்" Mein Kampf"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அட அப்படியா...!



தீக்கோழிகள் சுமார் 70 வருடம் வரை உயிர் வாழும். சுமார் 50 வருடங்கள் வரை முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். தீக்கோழிகள் மணிக்கு 43 மைல் (70 km) வேகத்தினை விடவும் அதிகமாக ஓடக்கூடியவை.

பையா என்ற பறவை மனிதனைப் போல் விசிலடிக்கும். GrizzlyBear என்கின்ற கரடியினம் குதிரைகளுக்கு இணையான வேகத்தில் ஓடும் திறனுடையது. அன்னப்பறவையின் உடலில் 25000 இறகுகள் வரை இருக்கும். நவரத்தினங்களில் ஒன்றான முத்தை உண்ணும் ஒரே உயிரினம் அன்னம் மட்டும் தான்.



தெள்ளுப்பூச்சி (Flea) அதன் உடலின் நீளத்தைப் போல் சுமார் 350 மடங்கு நீளத்தை தாண்டும். அதாவது ஒரு மனிதன் ஒரு கால்பந்து மைதானத்தை ஒரே நேரத்தில் தாண்டுவதற்கு சமம். நிலத்தில் பறக்காத பென்குயின் பறவைக்கு நீருக்குள் பறக்கும் சக்தி உண்டு.



தேனீக்கள் இனம் 40 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே பூமியில் தோன்றி விட்டன. ஒரு தேனீ 75,000 கிலோமீற்றருக்கு மேல் பயணம் செய்து 500 கிராம் அளவுள்ள தேனைச் சேகரிக்கின்றது.

தொகுப்பு: அ.மேரி அபர்ணா
யா/நடேஸ்வரா கல்லூரி



Great horned owl. இந்த ஆந்தை உடலில் உள்ள இறகுகளை எடுத்து விட்டு அதன் எடையைக் கணக்கிட்டால் அதன் இறகுகளை விட குறைவாகத்தான் இருக்குமாம். விலங்கினங்களில் cat fish இற்குத் தான் அதிக சுவை மொட்டுக்கள் உள்ளன. 27000 சுவை மொட்டுக்கள் உண்டு.



உலகில் உயிரினங்களிலேயே மிகப்பெரிய முட்டையினை இடுவது சுறா மீன் ஆகும். அறிவற்ற பறவை என்று எல்லோரும் நினைக்கும் வாத்துக்கள் உலகத்தில் உள்ள பறவை இனங்களின் அறிவு வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது முதல் நூறு இடங்களிற்குள் இருக்கிறது. வாத்து காலை நேரங்களில் தான் முட்டைகள் இடும்.



உலகத்தில் வாழும் பூச்சி இனங்களில் மிகவும் வினோதமான பூச்சி கரப்பான் பூச்சி தான். தலையே இல்லாமல் 9 நாட்கள் உயிரோடு வாழும் சக்தி கொண்டவை கரப்பான் பூச்சிகள். அதற்கு மேலும் அதனால் வாழ முடியும். ஆனால் எதுவுமே சாப்பிட முடியாததால் பசியால் வாடியே உயிர் துறக்கிறதாம். உலகத்தில் உள்ள விலங்குகளில் தாண்டி குதிக்க முடியாத மிருகம் யானை தான். புறா ஓய்வெடுக்காமல் சுமார் ஆயிரம் கி.மீ வரை பறக்கும் திறன் படைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹென்றிஃபயோல் (1841-1925)...

க.சற்குணராசா
தொழில்நுட்ப அலுவலர் தரம் 1,
வலி.வடக்கு பிரதேச சபை.

இவர் ஒரு பிரெஞ்சு முகாமைத்துவ தத்துவாசிரியர் ஆவார். உலோகக் கம்பனி ஒன்றின் பொறியியலாளராகக் கடமையாற்றியவராவார். மரபுவழிப் பாடசாலையினைத் தொடக்கி வைத்தவர்களுள் இவரும் ஒருவராக காணப்படுகின்றார். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவரது கொள்கைகள் மிகுந்த தாக்கமுடையனவாக இருந்தன.

**ஹென்றிஃபயோலின் முகாமைத்துவ தத்துவங்கள்**

நிறுவனமொன்றின் முகாமைத்துவம் வினைத்திறனுடையதாக இயங்க சில தத்துவங்கள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என ஹென்றிஃபயோஸ் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

1. தொழிற்தேர்ச்சி (Specialization of labor) ஊழியர் ஒருவர் தொழிலில் தேர்ச்சி டைவதனையும் முன்னேற்றமடைவதனையும் முகாமை ஊக்குவிக்க வேண்டும்.
2. அதிகாரம் (Authority) அதிகாரமும் பொறுப்பும் சரிவர வகைப்படுத்தப்படல் வேண்டும்.
3. நன்னடத்தை (Discipline)
4. கட்டளையிடலில் ஒற்றுமை (Unity of Command) ஊழியர் ஒருவருக்கான கட்டளை / அறிவுறுத்தல்கள் பலரால் பிறப்பிக்கப்படக்கூடாது. தனி ஒருவரால் பிறப்பிக்கப்படல் வேண்டும்.
5. நெறிப்படுத்தலில் ஒற்றுமை (Unity of direction) ஓர் குறிப்பிட்ட நோக்கினை அடைவதற்காக நிறுவனத்தின் சகல பகுதிகளும் வழிநடத்தப்பட வேண்டும்.
6. பொதுநலன் பேணல் (Subordination of Individual Interests)
7. சன்மானம் வழங்குதல் (Remuneration)
8. மையப்படுத்தல் (Centralization)
9. படிச்சங்கிலி (Chain of Superiors)
10. முறைமை ஒழுங்கு (Order)
11. நடுநிலை (Equity)
12. ஆளணியின் உறுதித் தன்மை (Personnel Tenure)
13. முன்முனைதல் (Initiative)
14. ஒற்றுமையே பலம் (Esprit de Corps)

பயோல் அனைத்து முகாமைத்துவ நிறுவனங்களிலும் பயன்படுத்தும் வண்ணம் தனது முகாமைத்துவம் பற்றிய கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

பயோலின் கருத்தின்படி நிர்வாகத் தத்துவங்கள் உலகளாவிய தன்மை கொண்டவை. அவை அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தேவைக்கேற்ப பிரயோகிக்கக் கூடியவை. இதில் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், கட்டளை பிறப்பித்தல் போன்ற விடயங்கள் அனைத்து முகாமைத்துவத்திற்கும் பொதுவான விடயங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இவரது முகாமைத்துவக் கருத்துக்களை பின்வருமாறு நோக்கலாம்.**

நிறுவனமொன்றின் நடவடிக்கைப் பிரிப்பு (Division of Industrial Activities)

தொழில் நிறுவனம் ஒன்றின் நடவடிக்கைகளை ஆறு வகையாகப் பிரித்து விளக்கமளிக்கின்றார்.

1. தொழில்நுட்பம்
2. வர்த்தகம் (வணிக நடவடிக்கைகள்)
3. நிதி
4. பாதுகாப்பு
5. கணக்குப் பகுதி
6. முகாமைத்துவம் என்பன அவையாகும்.

வினைத்திறனுள்ள முகாமையாளர் தரம் (Qualities of an Effective Manager) - ஆற்றல் மிக்க திணைக்களத் தலைவர் (முகாமையாளர்) ஒருவருக்கு

1. ஆரோக்கியம்
2. ஒழுக்கம்
3. பொதுக்கல்வி
4. தனித்துவம் மிக்க அறிவு
5. அனுபவம் ஆகிய பண்புகளும் அதனுடன் இணைந்த பயிற்சிகளும் அவசியமானவை என பயோல் குறிப்பிடுகிறார்.

**முகாமைத்துவச் செயற்பாடுகள் (Functions of Management)**

1. திட்டமிடல்
2. ஒழுங்கமைத்தல்
3. அதிகாரம் செய்தல்
4. ஒருங்கிணைத்தல்
5. கட்டுப்படுத்தல்

என முகாமைத்துவத்தின் கூறுகளை ஐந்து பிரிவுகளில் பயோல் விளக்கியுள்ளார்.

**முகாமைத்துவ மூலதத்துவம் (Principals of Management)**

பயோல் அனைத்துவித நிறுவனங்களிலும் முகாமையாளர்களாலும் பின்பற்றக் கூடிய 14 முகாமைத்துவத் தத்துவங்களைக் குறிப்பிடுகின்றார்.

1. தொழில் பகுப்பு
2. அதிகார பலம்
3. ஒழுக்க நெறி
4. ஒழுங்கமைந்த கட்டளை
5. ஒருங்கிணைந்த வழிநடத்தல்
6. கீழ்ப் பணியாளர் அக்கறை
7. ஊதியம்
8. பன்முகப்படுத்தல்
9. அதிகார ஒழுங்கு
10. ஒழுங்கு
11. சமதன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. நிலையான பதவிக்காலம்
13. தொடக்கம் (ஆரம்பம்)
14. ஒற்றுமையே பலம் போன்ற அவருடைய தத்துவங்கள் தொழிலுக்கு மட்டுமல்லாது அரசியல், மதம், இராணுவம் மற்றும் பிற அமைப்புக்களுக்கும் பொருந்தும் என அவர் கருதினார்.

**பேராசிரியர் சு.வித்தியானந்தன்**



பிறப்பு : மே 08, 1924, தெல்லிப்பளை, யாழ்ப்பாணம்.
இறப்பு : ஜனவரி 21, 1989 அகவை 64, கொழும்பு, இலங்கை.
கல்வி : முனைவர் (இலண்டன் பல்கலைக்கழகம்)
பணி : தமிழ்ப் பேராசிரியர்
பெற்றோர் : சின்னத்தம்பி சுப்பிரமணியம், முத்தம்மா
மனைவி : கமலாதேவி நாகலிங்கம்
பிள்ளைகள் : அருள்நம்பி, மகிழ்நங்கை, அன்புச்செல்வி, இன்பச் செல்வன், சிவமைந்தன்.

---



- என்னைக் கிழித்துத் துன்புறுத்தாதீர்கள்.
- எனது உடலில் பேனா, பென்சில் கொண்டு கீறாதீர்கள்.
- என் மேல் தலை வைத்துப் படுக்காதீர்கள்.
- என்னை விரித்து வைத்து உங்கள் கைகளை என் மேல் வைத்து அழுத்தாதீர்கள்.
- என்னை தூக்கி வீசாதீர்கள்.
- ஈரமான கைகளால் என்னை தூக்காதீர்கள்.
- ஈரமான இடத்தில் என்னை வைக்காதீர்கள்.
- நான் அனைவர்க்கும் உரியவள். எனவே என்னை இரகசியமாக வெளியே தூக்கிச் செல்லாதீர்கள்.



- பிளேடுகள் கத்திகள் கொண்டு எனது உடலை வெட்டாதீர்கள்.
- உங்கள் அதிக பாவனையால் ஊறுபட்ட எனது உடலை பசை கொண்டு ஒட்டிப் பேணுங்கள்.
- புதியவர்கள் வருகையால் எமது மதிப்பும் பயன்பாடும் அற்றுப் போவதில்லை.
- எனது வயது போய் விட்டதே என எண்ணி என்னை ஒதுக்காதீர்கள்.

– புத்தகம் –

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவக் குறிப்புக்களைத் தாங்கி வந்த பழமொழிகள் சில...

1. *'இளைத்தவனுக்கு எள்ளைக்கொடு;*
*கொழுத்தவனுக்குக் கொள்ளைக் கொடு'*

எள், கொள்ளு என்பவை இரண்டும் உணவு வகைகள். எள் என்பது நல்ல சத்துள்ள உணவாகும். மிகவும் மெலிந்த தேகம் கொண்டவர்கள் எள்ளை உட்கொண்டால் நன்கு உடல் பருமனாகும் என்றும், பருமனான உடலைக் கொண்டவர்கள் கொள்ளைத் உட்கொண்டால், உடல் மெலிந்து போதுமான அளவோடு இருக்கும் என்றும் இப்பழமொழி கூறுகிறது.

2. *ஆற்றுநீர் வாதம் போக்கும்; அருவி நீர் பித்தம் போக்கும்;*
*சோற்று நீர் இரண்டையும் போக்கும்*

மனிதர்களுக்கு ஏற்படக் கூடிய அனைத்து நோய்களுக்கும் அடிப்படையாக விளங்குவது வாதம், பித்தம், கபம் என்ற மூன்றுமே ஆகும். இவற்றுள் வாதம், பித்தம் தொடர்பாக ஏற்படும் நோய்களைப் போக்கும் வழிமுறைகளை இப்பழமொழி விளக்குகின்றது. ஆற்று நீரிலும், அருவி நீரிலும் உயர்ந்த தாதுப் பொருட்களும், மூலிகைச் சத்துக்களும், நிறைந்து காணப்படும். ஏனெனில், ஆற்றுப் படுகையிலும், அருவிக்கு நீர் வரும் மலைப் பகுதியிலும் மூலிகைச் செடிகள் நிறைந்து காணப்படும். மூலிகைகளின் மீது பட்டு இந்நீர் வருவதால் இத்தகைய குணமுடையதாக உள்ளது. வாதநோய் தொடர்பாக நரம்புக்கோளாறுகளும், பித்தநோய் தொடர்பாக மூளைக் கோளாறும் ஏற்படுகின்றன. இவற்றைக் குணப்படுத்த ஆற்று நீரும், அருவி நீரும் பயன்படுகின்றன. வாதம், பித்தம் இரண்டையும் சோற்று நீர் குணமாக்குகின்றது. இத்தகைய மருத்துவகுணம் கருதியே நாட்டுப்புற மக்கள் காலையில் எழுந்ததும் பழைய சோற்று நீரை அருந்துகின்றனர்.

3. *'வேலம் பட்டை பித்தத்தைப் போக்கும்;*
*ஆலம்பட்டை மேகத்தைப் போக்கும்'*

வேலம்பட்டையை இடித்து ஒரு குவளை நீர்விட்டு காய்ச்சி வடிகட்டி அரைக் குவளையாக்கித் தினமும் காலை வேளை குடித்துவர பித்த நோய்களான, வயிற்றுப்புண், பித்தமயக்கம், கைகால் குடைச்சல் குணமாகும். ஆலமரத்தின் பட்டையைக் குடிநீராக்கி குடித்து வர வாய்ப்புண், வாய்நாற்றம், சிரங்கு, கரப்பான்படை ஆகியன விலகும் என்கிறது பழமொழி.

தொகுப்பு: பொ.அன்ரன் அல்வீனசம்,
நூலகப் பணியாளர்,
காங்கேசன்துறை பொதுநூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பு...!

சி.குமரன்
மல்லாகம்.

கடவுளின் வரம் வாசிப்பு
இன்பத்தின் இமயம் வாசிப்பு
அறியாமை அழிப்பது வாசிப்பு
வளமாய் வாழவைப்பது வாசிப்பு

வெற்றியின் வடிவம் வாசிப்பு
உயர்வின் உண்மை வாசிப்பு
ஆற்றலின் அடித்தளம் வாசிப்பு
அறிவை அணைப்பது வாசிப்பு

வையகத்தின் வடிவம் வாசிப்பு
உத்தமனின் உலகம் வாசிப்பு
சிந்தனையின் சிகரம் வாசிப்பு
சிறந்தது புத்தக வாசிப்பு

நீவீர் வாசிப்பை நேசிக்க
உலகம் உம்மை யாசிக்க
தரணியில் தனித்துவமாக வளர
வேண்டும்
தத்துவ சீலர்களாக மிளிரவேண்டும்

ஓர் நொடிக்கு ஒருதடவை சுவாசிப்பு
ஓர் நாளைக்கு மூன்று வேளை
போசிப்பு
ஓராண்டிற்கு ஒரு லட்சம் தடவை
வாசிப்பு
அறிஞனின் அழகு நூலின் நேசிப்பு

உலகம் உடைவது எதனால்
நன்மை நலிவது எதனால்
இன்பத்தை இழப்பது எதனால்
கொடூரம் தழைப்பது எதனால்
அனைத்தும் நிகழ்வது வாசிப்பு
அழிவதனால்
வாழ்வாங்கு வாழ
வையகத்தை வளரவைக்க
நூல்களை நேசிக்க வேண்டும் மனமே
வாசிப்பினால் பெருகிடும் அறிவுக்
கணமே
நல்லறிவான நன்னூலை வாசி
வாழ்க்கையின் வடிவத்தை வாசி
ஆற்றலின் அறிவை வாசி
வாசிப்பை தினமும் நேசி

# வாசிப்பை நேசிப்போம்...!

உடலுக்கு எப்படி உடற்பயிற்சி முக்கியமோ அது போல மனப்பயிற்சிக்கு புத்தக வாசிப்பு முக்கியம் என்பர் நம்மை ஏமாற்றாத ஒருசிறந்த நண்பன் புத்தகம் தான், நல்ல புத்தகங்களை வாசிப்பதால் உயர்ந்த புதிய சிந்தனைகள் பிறக்கும், நமது ஆற்றல் பெருகும், உற்சாகம் ஊற்றெடுக்கும், சோர்வு அகலும், மனம் புத்துனர்ச்சி பெறும், வாழ்வில் முன்னேற நல்ல வழி வகுக்கும்.

புத்தக வாசிப்பை பேச்சாகவும் மூச்சாகவும் கொண்டு ஜீவித்தவர்கள் எத்தனையோ பேர் இந்தியாவின்தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேரு நான் மறைந்த பின் என் உடல் மீது மலர் மாலைகளை வைக்கவேண்டாம் என் மீது புத்தகங்களை பரப்புங்கள் என்று கேட்டுக் கொண்டார். நெல்சன் மண்டேலாவை சிறையில் அடைத்தபோது எனக்கு எந்த சுதந்திரமும் வேண்டாம் புத்தகம் வாசிப்பதற்கு மட்டும் அனுமதி தந்தால் போதுமென்றார். இவ்வாறு சான்றோர் வாழ்ந்த உலகிலே இன்றைய நவீனத்துவத்தின் வளர்ச்சியோடு சமூக வலைத் தளங்களின் ஆதிக்கத்தால் நூல் வாசிப்பு மரபு மாறி வருகின்றது புத்தகங்கள் வாசிப்பதற்கு நேரமில்லை என்று பெரும்பாலானோர் கூறுகின்றார்கள். ஆனால் அவர்கள் தமது நண்பர்களுடன் வீண் பேச்சுக்களிலும் அரட்டைகளிலும் செலவளிக்கும் பொன்னான நேரத்தை வீணடிக்காமல் வாசிப்பதற்கு செலவளித்தால் வாழ்வில் முன்னேறலாம். ஒவ்வொருவரும் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கி தங்கள் வீட்டில் சிறு நூலகம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அதன் மூலம் எமது குடும்பமே வாசித்து அறிவை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படும் புத்தகங்கள் நிறைந்த சூழலில் வளரும் குழந்தைகள் அறிவு உள்ளவர் களாகவும் தனனம்பிக்கை நிறைந்தவர்களாகவும் இனிய பண்புள்ளவர்களாகவும் விளங்குவார்கள் நல்ல புத்தகங்களை படித்து கெட்டுப் போனவர்கள் யாரும் இல்லை, புத்தகங்களை படிப்பதை கடமையாக கொண்டவர்களும் வாசிப்பை உயிர் என மதித்தவர்களும் மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ளார்கள் எனவே சிறுவயதிலேயே நூலகத்திற்கு சென்று புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தையும் வழக்கத்தையும் ஏற்படுத்தினால் நிச்சயம் புத்தக வாசிப்பால் அவர்கள் வாழ்வில் எத்தனையோ அனுபவங்களை பெற்று உலகம் போற்றும் சான்றோர்கள் ஆவார்கள் என்பதனை மறுப்பதற்கில்லை. "வாசிப்பை நேசிப்போம் வாழ்க்கையிலும் பயன்படுத்துவோம்"

– திருமதி கு.கௌசியா –
வருமானப் பரிசோதகர்
வலி.வடக்கு பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பழந்தமிழரின் போர்க்கருவிகள்




நமக்கு போர்க் கருவிகள் என்றதுமே கத்தி, வேல், வாள்,கேடயம், அரிவாள் வீச்சரிவாள் போன்றவையே நினைவுக்கு வரும். புழைய திரைப்படங்களை பார்த்தவர்களுக்கு “கட்டாரி” என்ற போர்க் கருவியையும் ஓரளவு தெரிந்திருக்கும். அதையும் நாம் நேரில் பார்த்தது கிடையாது. ஆனால் பண்டைய காலத்தில் போர்க்கருவிகள் பல இருந்திருக்கின்றன.

வீரத்தில் சிறந்து விளங்கிய தமிழர்கள் இவ்வாறான போர்க்கருவிகளை பயன்படுத்தியிருக்கிறார்கள் என்ற செய்தியானது நமக்கெல்லாம் பெரும் வியப்பாக அமைந்துள்ளது.

**பழந்தமிழரின் போர்க் கருவிகள்**




1. வளைவிற்பொறி
2. கருவிரலூகம்
3. கல்லுமிழ் கவண்
4. கல்லிடுகூடை
5. இடங்கணி
6. தூண்டில்
7. ஆண்டலையடுப்பு
8. குவை
9. கழு
10. புதை
11. அயவித்துலாம்
12. கைப்பெயர்ஊசி
13. எரிசிரல்
14. பன்றி
15. பனை
16. எழு
17. மழு
18. சீப்பு
19. கணையம்
20. சதக்களி
21. தள்ளிவெட்டி
22. களிற்றுப்பொறி
23. விழுங்கும் பாம்பு
24. கழுகுப் பொறி
25. புலிப்பொறி
26. குடப்பாம்பு
27. சகடப்பொறி
28. தகர்ப்பொறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. அரிநூற்பொறி
30. குருவித்தலை
31. பிண்டிபாலம்
32. தோமரம்
33. நூராசம்
34. சுழல்படை
35. சிறுசவளம்
36. பெருஞ்சவளம்
37. தாமணி
38. முசுண்டி
39. முசலம்



தமிழர்களின் போர்முறை அறப்போர்முறை ஆகும்.அவர்களின் போர்முறை வஞ்சகம், சூழ்ச்சி, அடுத்துக் கெடுத்தல் அற்றதாக நேரிய வழியில் இருந்துள்ளது. காலை முரசறையத் தொடங்கும் அவர்களின் போர் மாலை முரசறைய நிறுத்தப்படுவதாக இருந்துள்ளது. முழு இரவு ஓய்விற்குப் பின் மீண்டும் அடுத்த நாள் காலை தொடங்கும் அவர்களின் போர்முறை எதிரிகளுக்கு இரங்கும் நெஞ்சம் உடையதாக, எதிரிகளுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் அமைந்திருக்கின்றது.

எதிரிகளையும் தம்மொடு ஒத்த மனித உள்ளமாக, மனித உடலாகக் கொண்டு தமிழர்கள் போர் செய்துள்ளனர். அவர்கள் தன் இரத்தம் வெளிப்படும் துன்பத்தைப் போலவே பிறர் இரத்தம் வெளிப்படும் துன்பத்தைக் கண்டுள்ளனர். இதன் மூலம் போர்க்களம் என்பது கொலைக்களமாக மட்டும் விளங்காமல் துயரம் கண்டு இரங்கும் களமாகவும் இருந்துள்ளது. முல்லைப் பாட்டில் இறந்த உயிர்களுக்காகத் துன்புறும் மன்னனின் செயல் இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகும். இவ்வகைப்பட்ட போரை நடத்திட தமிழர்க்குப் பல போர்க்கருவிகள் பல திட்டங்கள் உதவி புரிந்திருக்க வேண்டும். அவர்கள் இவ்வகைக் கருவிகளை உருவாக்கி அவற்றைப் பயன்படுத்திடக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். தமிழர் இத்தகைய போர் அறிவியலில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தமைக்கான சான்றுகள் இலக்கண நூலான தொல்காப்பியம் முதல் கிடைக்கப்பெறுகின்றன.

**பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை**



பிறப்பு : சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
யூன் 27, 1899
மட்டுவில், யாழ்ப்பாணம், இலங்கை.
இறப்பு : மார்ச் 13, 1986
அகவை : 86
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்,
இலங்கை.
வசிப்பிடம் : கலாசாலை வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
தாயகம் : இலங்கை
அறிமுகம் : தமிழறிஞர்
பட்டம் : பண்டிதமணி
சமயம் : இந்து
பெற்றோர் : சின்னத்தம்பி, வள்ளியம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகமும் நாமும்...!

ஒரு நாடு முன்னேற மக்களை கல்வி அறிவு உடையவர்களாகவும் நற்சிந்தனை உடையவர்களாகவும் பல்துறை வல்லுனர்களாகவும் ஆக்க வேண்டும். இது மெய்ப்பட வேண்டும் என்றால் பல துறை நூல்கள் அடங்கிய பொதுநூலகங்களை உருவாக்க வேண்டும் என்ற சிந்தனை உலகளாவிய ரீதியில் வலுத்தது. ஒரு நூல் தனியொருவரிடம் இருந்தால் அதனால் பயன் ஏதுமில்லை. பொது நூலகத்தில் இருந்தால் பழுத்த மரம் பலருக்கு பயன் தருவது போலாகும். இதன் பயனாகவே இந்தியா உட்பட உலக நாடுகளில் பொது நூலகங்கள் திறக்கப்பட்டன. நூலக பயன்பாட்டிற்கான விதிகளை உருவாக்கி தந்த சீர்காழி சீ.ரா.இரங்கநாதன் அவர்களை நூலகவியலின் தந்தையாக போற்றுகின்றோம்.

நூலகம் புத்தகசாலை, வாசிகசாலை, படிப்பகம், சுவடிச்சாலை, சுவடியகம், ஏடகம், நூல் நிலையம் என பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. நூலகம் என்ற தமிழ் சொல்லுக்கு நிகரான ஆங்கிலச் சொல் Library (லைப்ரரி) ஆகும். லத்தீன் மொழியில் லிப்ரா என அழைக்கப்படுகின்றது. ஆறில்லா ஊர் அழகுக்கு பாழ் என்பது பழமொழி. நூலகமில்லா ஊருக்கு அறிவு பாழ் என்பது புதுமொழி. ஒரு அரசின் தலையாய கடமை மக்களை அறிவுடையோராக்குதல் ஆகும். அதற்கிணங்க ஊர் தோறும் மக்கள் தொகைக்கு ஏற்ப நூலகங்களை உருவாக்கி தேவையான நூல்களை வழங்க வேண்டும்.

மாணவர் பருவம் என்பது கற்றலுக்கு உகந்தது. இந்த பருவத்தில் பல துறைகளை பற்றி அறிந்து கொள்ள வேண்டும். இதற்கு துணை நிற்பது நூலகமே. நூலகத்தில் மருத்துவம், திறனாய்வு, அறிவியல், கணிதம், வணிகம் போன்ற எண்ணற்ற நூல்கள் இடம்பெற்றுள்ளன.

**நமது கடமை**

நூலகத்திலுள்ள நூல்கள் கிழியாமலும் சிதையாமலும் பாதுகாக்க வேண்டும். இதன் மூலம் மற்றவர்களுக்கு பயன்பட ஏதுவாக இருக்கும். வாழ்வில் வெற்றி பெற பல நூல்களை படிக்க வேண்டும். அறிவு வளரவும் ஆற்றல் மிளிரவும் நூல்களைப் படிப்போம். நூலகங்களைப் பாதுகாப்போம்.

அறிவுப்பசி நீங்க வாசிப்போம் வாங்க!
வாசிப்பின் மூலம்
நம் சிந்தனை மேலோங்கும்!
நம் சொல் திறன் வளரும்!
நாம் எந்த தலைப்பிலும் பேசத் தயார்ராவோம்
மன அழுத்தத்தைக் குறைக்கும்
கற்பனை வளம் அதிகரிக்கும்
தனிமையைத் தகர்த்து விடும். இப்படி இன்னும் பல...

க.நவபாலன்
முகாமைத்துவ உதவியாளர் - 111
வலி.வடக்கு பிரதேச சபை

நம் பயணங்களில் அலைபேசியில் நேரம் செலவழிப்பதை விட ஒரு நல்ல படைப்பை வாசித்தால் அந்த நேரம் முழுமை பெறும். எழுத்தாளரின் "மை" க்கு அர்த்தம் கிடைக்கும். வலம்புரி ஜான் கூறியது போல் மைனராக இருந்த மானுடம் புத்தகங்களில் அறிமுகத்திற்கு பிறகு மேஜரானது. அதாவது வாசிப்பின் நேசத்தை உணர்ந்தால் தலைமுறை காக்கும் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் இலகுவாக காத்துக் கொள்ளலாம்.

**வாசிக்கும் பழக்கம் வளரட்டும். வளரும் தலைமுறை செழிக்கட்டும்.**

---

**"உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த புத்தகம் - The Gospel book of Henry the Lion என்ற புத்தகம் 226 ஓலைச்சுவடிகளைக் கொண்டதாக இருந்தது. இது 8.14 மில்லியன் பவுண்ஸ் விலைக்கு விற்கப்பட்டது."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதல் நூலகம்

புத்தாக்கம் தரும் புத்தகங்களின் பாதுகாப்புப் பெட்டகமாக நூலகங்கள் திகழ்கின்றன. பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, வினாடி வினா போன்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்பதற்கு மட்டுமன்றி செய்முறைப் பயிற்சி (Assignment), தொடர்பான கட்டுரைகள் சமர்ப்பிப்பதற்கு ஏராளனமான மேற்கோள்களுடன் செய்திகளைத் தொகுத்தளிக்க நூலகங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

அது மட்டுமா? நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் படிப்பதற்கும், பல்துறை தொடர்பான செய்திகளை அறிந்து கொள்வதற்கும் உதவும் செய்திகளின் சங்கமமே நூலகங்கள் என்றால் மிகையாகாது. எதற்கும் தோற்றம் என்ற ஒன்று இருக்கும் தானே. நூலகத்தின் தோற்றத்திற்குக் காரணமானவர்களாக ஈராக் நாட்டைச் சேர்ந்தோர் உள்ளனர். அதாவது, முற்காலத்தில் மெசபதேமியர்கள் என அழைக்கப்பட்ட ஈராக்கியர்கள். தற்போதைய டைகிரிஸ் மற்றும் யூபிரட்டிஸ் ஆகிய ஆறுகளுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பே பண்டைய மெசபதேமியப் பகுதியாகும். தற்போது ஈரான், ஈராக் மற்றும் சிரியா ஆகிய பெயர்களில் அழைக்கப்படுகிறது. இந்தக் கண்டத்தில் குறிப்பிடத்தக்க நான்கு பேரரசுகளாக சுமேரியா, பாபிலோனியா, அசிரியா மற்றும் அக்காத்தியர் ஆகியன விளங்கின. சுமார் 3 ஆயிரத்து 300 ஆண்டுகளுக்கு முன்பு அசிரியப் பேரரசின் நிர்வாகத் துறையில் ஏற்பட்ட குழப்பங்களை சென்னாசெர்ப் என்ற அரசர் நீக்க விரும்பினார். அரசாங்கத்தினர் முக்கிய ஆவணங்கள் அனைத்தையும் களிமண் தகடுகளில் எழுதி, சூளைகளில் சுட்டுக் காயவைத்து பாதுகாப்பான இடத்தில் வைக்கும்படி ஆணையிட்டார். மன்னரின் ஆணையையடுத்து, அரசாங்க ஒப்பந்தங்கள், கடிதங்கள், ஆணைகள், உளவு அறிக்கைகள் மற்றும் முக்கியமான ஆவணங்கள் களிமண் தகடுகளில் எழுதப்பட்டன. பின்னர், சூளைகளில் சுட்டு அரசாங்கக் கருவூலங்களிலும், கோவில் கருவறைகளிலும் பாதுகாப்பாக வைக்கப்பட்டன. பின்னர் மருத்துவக் குறிப்புகளும், சமய நூல்களும் பாதுகாக்கப்பட்டன. அசிரியப் பேரரசின் கடைசி மன்னர் அகர்பானிபல் (கி.மு.700 _ கி.மு.600) ஆட்சியின்-போது, களிமண் தகடுகள் 30 ஆயிரத்திற்கும் அதிகமாகின. வெவ்வேறு இடங்களில் வைத்துப் பாதுகாப்பது மிகவும் கடினமாக இருந்தது.

எனவே, அசிரியாவின் தலைநகரான (தற்போதைய ஈராக்) நினிவெக் (Nineveh) (தற்போது மோசுல்) என்னுமிடத்தில் அனைத்தையும் துறைவாரியாகப் பிரித்து அடுக்கி வைக்க மன்னர் ஆணையிட்டார். மன்னரின் ஆணைப்படி, துறைவாரியாகப் பிரித்து அடுக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காக விடப்பட்டது. இதுவே உலகில் அமைக்கப்பட்ட முதல் நூலகம் ஆகும். இந்த நூலகம் The Royal Library of Ashurbanipal என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இந்த நூலகத்தைக் கேள்விப்பட்ட அலெக்சாண்டர் (கி.மு.356 _ கி.மு.323) நேரில் சென்று பார்த்தார். அஸ்குர்பனிபலைவிட பெரிய நூலகம் கட்ட நினைத்தார். எகிப்து மக்கள் அப்போது பாப்பிரஸ் தாள்களில் எழுதி வந்தனர். உலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுவதுமிருந்து கல்வி, கலை, இலக்கியம், கணிதம், அறிவியல், மருத்துவம் ஆகிய துறைகளிலிருந்து சிறந்த நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அந்த நூல்கள் அனைத்தும் கிரேக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பாப்பிரஸ் தாள்களில் எழுதப்பட்டன.

வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அலெக்சாண்டர் மரணம் அடைந்தார். எனினும் அவரது நெருங்கிய நண்பரும், அப்போதைய எகிப்தின் அரசருமான டாலமியின் மேற்பார்வையில் வேலைகள் நடைபெற்றன. கி.மு.300இல் எகிப்தின் அலெக்சாண்டிரியா நகரில் 7 லட்சத்திற்கும் அதிகமான பாப்பிரஸ் தாள்களைக் கொண்ட பொதுநூலகம் அமைக்கப்பட்டது. நூலகத்திற்கு The Royal Library of Alexandria என பெயர் வைக்கப்பட்டது.

பின்னர் மேலைநாடுகளில் உள்ள புகழ்பெற்ற பல்கலைக்கழகங்கள் நூலகங்களின் தேவையினை உணர்ந்தன. பல்கலைக்கழக வளாகங்களிலேயே நூலகங்கள் அமைக்கப்பட்டன. பின்னர் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்து இன்று நாம் பார்க்கக்கூடிய அளவில் வளர்ச்சி பெற்றுள்ளன.



**ஆறுமுகநாவலர்**

பிறப்பு : ஆறுமுகன்
டிசெம்பர் 18, 1822
நல்லூர், யாழ்ப்பாணம்.

தேசியம் : இலங்கைத் தமிழர்

பணி : பதிப்பாளர், சைவப்பிரசங்கர், கல்விச்சாலை நிறுவுனர், எழுத்தாளர்.

அறிமுகம் : சைவசமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்

சமயம் : சைவம்

**உலகில் மிகவும் நீளமான / பெரிய நெடுங்கதை (நாவல்)**

Les Hommes De Bonne Volonte ==Man of Goodwill

**1885 இல் பிரான்ஸ் நாட்டின் லூயிஸ் ஹென்றி ஜீன் ஃபரிகோவில் என்பவரால் எழுதப்பட்ட இந்த நாவல் 27 புத்தகங்களைக் கொண்டது.**

**இதன் ஆங்கிலப் பதிப்பு 1933 இல் 4959 பக்கங்களை கொண்டதாக 14 புத்தகங்களில் வெளியிடப்பட்டது.**

---

**"உலகின் மிகப்பெரிய நூலகம்**
**காங்கிரஸ் நூலகம், வாஷிங்டன்"**
**The Library of Congress – Washington.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதரின் வெற்றி

இராமகிருஷ்ண பரமஹம்சரின் மடத்தில் ஒரு விழா நடக்க இருந்தது. அதற்காக நிறைய லட்டுகள் தயாரித்து வைத்திருந்தனர். அவற்றை எறும்புகளிடமிருந்து பாதுகாக்க என்ன செய்யலாம் என்று ராமகிருஷ்ணரிடம் யோசனை கேட்டனர்.

அவரோ, லட்டு இருக்கும் பாத்திரத்தைச் சுற்றிச் சர்க்கரையால் ஒரு வட்டம் போட்டார். இரவில் வந்த எறும்புகள் சர்க்கரையை எடுத்துக் கொண்டு சென்றுவிட்டன. அவை லட்டு இருந்த பாத்திரத்தின் அருகே கூட செல்லவில்லை.

காலையில் இதைப் பார்த்தவர்கள் ராமகிருஷ்ணரிடம் கூறினர்.

அவர் சொன்னார்: ""இந்த எறும்புகள் முன்னேறிச் சென்றிருந்தால் இவற்றுக்கு லட்டுகளே கிடைத்திருக்கும். இந்த எறும்புகளைப் போலத்தான் மனிதர்கள் பலரும் உள்ளனர். சிறு வெற்றியே போதும் எனப் பெரும் வெற்றியைக் கோட்டை விட்டுவிடுகின்றனர்!"


நல்ல நண்பர்கள், நல்ல புத்தகங்கள், அமைதியான மனம் இவை தான் உன்னதமான வாழ்க்கை

---

உலகின் சில நாடுகள் தங்கள் அரசாங்கப் பணிகளையும் முக்கிய நிகழ்வுகளையும் ஒரு குறிப்பிட்ட புத்தகத்தில் வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளன அவற்றுள் சில

1. நீலப் புத்தகம், (Blue Book) – பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அறிக்கைப் புத்தகம்.
2. பச்சை புத்தகம் (Green Book) - இத்தாலி மற்றும் ஈரானின் அரசாங்கத்தின் அறிக்கைப் புத்தகம்
3. சாம்பல் புத்தகம் (Gray Book) – ஜப்பான் மற்றும் பெல்ஜியம் நாடுகளின் அரசாங்கத்தின் அறிக்கைப் புத்தகம்.
4. இளஞ்சிவப்பு புத்தகம் (Orange Book) – நெதர்லாந்து அரசாங்கத்தின் அறிக்கைப் புத்தகம்.
5. வெள்ளைப் புத்தகம் (White Book) – ஜேர்மனி, போர்த்துக்கல், சீனா நாடுகளின் அரசாங்கத்தின் அறிக்கைப் புத்தகம்.
6. மஞ்சள் புத்தகம் (Yellow Book) - ஃப்ரெஞ்ச் நாட்டு அரசாங்கத்தின் அறிக்கைப் புத்தகம்.
7. கருப்பு புத்தகம் "Black Book" என்பது தண்டனைக்குரியவர்களின் பெயர்கள் அடங்கிய புத்தகம்.
8. சீனாவின் மருத்துவத்தில் பழமையான புத்தகம் Huangdi Neiching கி.மு. 450

---






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகத்துறையும் தகவல் பரிமாற்றங்களும்

சோ.செல்வரத்தினம்
தலைவர்,
நல்லிணக்கக்குழு, மாவிட்டபுரம் தெற்கு பிரிவு
உறுப்பினர்,
வாசகர் வட்டம், பொதுநூலகம் - காங்கேசன்துறை.

உலகளாவிய ரீதியில் இன்று தகவல் பரிமாற்றங்களும் ஊடகத்துறையும் வளர்ச்சியடைந்துள்ளதன் காரணத்தினால் அரசியல், விஞ்ஞான தொழில்நுட்பம், மருத்துவம், மனித நாகரிக மாற்றங்கள், வங்கிச் சேவைகள், பணப்பரிமாற்றங்கள், பயண நடைமுறைகள், வேலைவாய்ப்புக்கள், விளையாட்டு நிகழ்வுகள், புதிய உற்பத்தி பொருட்களின் அறிமுகங்கள் இன்னும் நானாவித சேவைகள் பற்றி உடனுக்குடன் அறிந்து கொள்வதற்கும் இலகுவாகவும் விளக்கமாகவும் கல்வி சம்பந்தமான விளக்கங்கள் தெடல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நவீனமயப்படுத்தப்பட்ட ஒளி ஒலிகளைக் கொண்ட உயரிய வசதிகளை உடைய சாதனங்கள் கண்டறியப்பட்டுள்ளதால் இன்று ஆர்வமுடன் அவற்றையெல்லாம் அறிய முற்படுபவர்களுக்கு வரப்பிரசாதமாக இருப்பதுடன் வாழ்வியலிலும் பெரிதும் நன்மையைக் கொடுக்கும் பொறிமுறைகளாக விளங்குகின்றன. நவீன முறையில் தயாரிக்கப்படும் அலைபேசிகளும் கணனிகளும் தகவல் பரிமாற்றங்களை இலகுவில் பெற்றுக் கொள்ளக் கூடிய சாதனங்களாகப் பயன்படுத்துவதானது அவையெல்லாம் நவீன விஞ்ஞான தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் வெளிப்பாடாக முக்கியத்துவம் பெற்றுள்ளன.

இவ்வாறான தொழில்நுட்ப வசதிகள் ஊடகத்துறையிலும் பெரிய உறுதுணைப் பொறிகளாக உள்ளதால் ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் இணையத் தளங்களும் இலகுவாகத் தங்கள் செயற்பாடுகளைத் துரிதமாகச் செய்யக்கூடியதாக அமையப் பெற்றுள்ளதை அறிவோம்.எத்தனையோ மைல்களுக்கப்பால் நடைபெறுகின்ற நிகழ்வுகளையும் அனர்த்தங்களையும் அல்லாமல் நடந்து முடிந்த கொலை, கொள்ளை, பாரிய தாக்குதல்கள், ஆட்கடத்தல்கள் போன்றவற்றையெல்லாம் நேரடியாக தொலைக்காட்சி வழியாகவோ அல்லது இணையத்தளங்கள் வழியாகவோ நாம் எங்கள் இருப்பிடங்களில் இருந்தவாறே பார்க்க முடிகின்றது. இவை ஊடகத் துறைக்கு தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வளவு தூரம் பயன்பாட்டிலுள்ள பொறிமுறைகளாக உதவுகின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

துல்லியமாக கிடைக்கும் தகவல்கள் நீதித்துறைக்கு சான்றுகளாக வெளிப்படுத்துவதற்கும் சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. மேலும் பொதுமக்கள் கொலை, கொள்ளை, வன்முறை போன்ற அச்சுறுத்தல், பெரும் பாதிப்புக்களிலிருந்து தங்களையும் தங்கள் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏதுவாக தமது வீடுகள், கடைக்கட்டிடங்கள் போன்ற இடங்கில் பொருத்தப்படும் (CCTV) கமராக்கள் கூட தொழில்நுட்ப வரலாற்றில் முக்கிய கருவியாக இன்று பயன்படுத்தப்படுவதனை பார்க்கும் போது வாழ்வியலில் தொழில்நுட்பம் பயனுள்ள ஒன்றாக விளங்குவதனை அவதானிக்கலாம்.

இவ்வாறான தகவல் பரிமாற்றங்கள் மருத்துவத்துறைக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. உதாரணமாக மருத்துவர்கள் எவ்வளவு தான் நுணுக்கமாக நோய்களைக் கண்டறிந்து சிகிச்சை வழங்கக் கற்றுக் கொண்ட போதிலும் புதிய புதிய நோய்கள் மனிதருக்கு மட்டுமல்லாது பறவைகள் விலங்குகளுக்கும் தொற்று நோய்களாகவும் தொற்றா நோய்களாகவும் பரவி வருகின்றன. இவற்றுக்காக புதிய மருந்துகளும் மருத்துவ விஞ்ஞானிகளால் கண்டுபிடிக்கப்பட்டு வரும் நிலையில் அவை தொடர்பான விபரங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக தகவல்களையும் எமது பிரதேசத்திலுள்ள மருத்துவ நிபுணர்கள் தவகல் பரிமாற்றத்தினூடாக பெற்று எமது பிரதேச நோயாளிகளின் உடற்கூற்று அறிக்கைகள், நோயின் மாதிரிகள் தொடர்பாக பல மைல்களுக்கு அப்பால் உள்ள மருத்துவ அறிஞர்களுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பி ஆலோசனைகளை சில நிமிடங்களில் பெற்று நோயாளர்களை குணப்படுத்திய சந்தர்ப்பங்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளமை தொடர்பாக அறியும் போது மருத்துவத்துறைக்கு தகவல் பரிமாற்றத்தின் பயன்பாட்டின் முக்கியத்துவம் உணரப்படுகின்றது.

இன்றைய உலகில் ஊடகத்துறை சார்ந்தவர்கள் தமது கடமைகளை இரவு பகல் பாராது மனத்தைரியத்தோடும் உற்சாகத்தோடும் செய்கிறார்கள். அவர்களது சேவைகள் பெரும் ஆபத்து நிறைந்த தொழிலாகும். ஊடகவியலாளர்கள் பொறுப்புணர்ச்சியுடனும் (Sense of Responsibility) நடுநிலையாகவும் (Neutrality) தமது செய்திகளை ஊடகங்களில் வெளியிட வேண்டியவர்களாக இருக்க வேண்டும். பக்கச்சார்பான உண்மைக்கு மாறான செய்திகள் வெளியிடுவதால் சம்மந்தப்பட்டவர்களுக்கு மன உளைச்சலும் பாதிப்புக்களும் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகமுண்டு.

இயற்கை அனர்த்தங்களான பூகம்பம், எரிமலை வெடிப்பு, வெள்ளப்பெருக்கு, புயல், கடல் கொந்தளிப்பு போன்றவை இடம்பெறும் காலங்களிலும் போர், கலகம், கிளர்ச்சி போன்ற நிலமைகளிலும் அந்தந்த இடங்களுக்கு சென்று செய்திகளை சேகரிப்பது பெரும் உயிர் ஆபத்து நிறைந்த அபாயகரமான விடயமாகும். அவ்வாறான காலகட்டங்களில் ஊடகவியலாளர்களுக்கு தகவல் பரிமாற்ற தொழில்நுட்பம் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஊடகத்துறை வாயிலாக மக்கள் பெருமளவான நன்மைகளையே பெற்றுக் கொள்கின்றனர். ஊடகங்கள் மூலம் பல்வேறு விழிப்புணர்வுகள் மக்களைச் சென்றடைகின்றன. மக்கசள் மத்தியில் ஊடகங்கள் பெறும் முக்கியத்துவத்தைப் போன்று நூலகங்களும் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. ஊடகங்கள் தகவல்களை உடனுக்குடன் வழங்குகின்றது. நூலகம் பல வருடங்களுக்கு முற்பட்ட தகவல்களையும் நூல்களையும் தன்னுள் சேமித்து வைத்து வாசகர்களுக்கு வழங்குகின்றது.

மேலும் ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகள், தகவல்களை பொதுமக்கள் மத்தியில் சேர்ப்பதில் நூலகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றது. பரீட்சைக்கு மட்டும் பொது அறிவு நூல்களைப் படிப்பதன் மூலம் முழு நன்மையும் கிடைப்பதில்லை. ஊலகில் மூலை முடுக்கிலெல்லாம் தினசரி ஒவ்வொரு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவற்றை ஒலி வடிவிலும் ஒளி வடிவிலும் அச்சு வடிவிலும் எமக்கு வெளிப்படுத்துபவை ஊடகங்களே. இன்றைய கால தொழில்நுட்ப வளர்ச்சி தகவல்களையும் செய்திகளையும் மிகவும் விரைவாக உடனுக்குடன் பெற்றுக் கொள்ள ஊடகத்துறைக்கு பெரிதும் உதவுகின்றது. இதன் மூலம் நூலகங்களும் அதிக நன்மையடைகின்றன.

எனவே வாசிப்பு பழக்கத்தை பயிற்றுவித்து ஊக்கப்படுத்தி செயற்படுத்த வழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்த வேண்டும் என பெற்றோர்களையும் கல்விமான்களையும் அன்பாக கேட்டுக் கொள்கின்றேன்.

---

**உலகில் அதிகமான நாவல்களை எழுதிய எழுத்தாளர்**
**திருமதி மேரி ஃபாக்னர் (கேத்தலீன் லின்ட்சே) ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர்.**
**904 நாவல்கள் எழுதியுள்ளார். இவருக்கு அடுத்ததாக சிறுவர்களுக்கான துப்பறியும் நாவல்கள் எழுதிப் புகழ் பெற்ற எனிட் ப்ளைடன், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர் சுமார் 800 புத்தகங்களை எழுதியுள்ளார்.**

**"இலக்கியத்தின் லிங்கன்" Lincoln of Literature என்று அழைக்கப்படும் பிரபல எழுத்தாளர்**
**மார்க் ட்வைன் (Mark Twain) அமெரிக்க எழுத்தாளர்,**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலுவற்றவளின் வாழ்வில் வசந்தம்

முகிலன்
வலைப்பாடு

சிறுகதை...

பொழுது கீழ் வானை நோக்கி மெல்ல மெல்ல சரிந்து கொண்டிருந்தது. கந்தசாமி தனது வீட்டுக் காணியில் பயிரிடையில் களை எடுத்தவனாய் களைத்து நின்று கொண்டிருந்தான்.



அவன் காதோரம் அவனது அன்பு மனைவி கண்ணம்மாவின் அழுகைக் குரல் அவலமாய் வந்தடைந்தது. சிறிது நேரம் பதற்றமடைந்த அவன் ஓடோடிச் சென்று, பிரசவ வேதனையில் துடிதுடித்துக் கதறும் கண்ணம்மாவினை அள்ளி அணைத்தபடி வீதியோரம் நின்று கொண்டிருந்த முச்சக்கர வண்டியை நோக்கி கால்கள் கிடுகிடுக்க ஓடினான். முச்சக்கர வண்டியின் இருக்கையில் கண்ணம்மாவை அமர்த்தி தானும் அமர்ந்து கண்ணம்மாவின் தலையை தன் மடியில் தாங்கியவாறு பிரதேச வைத்திய சாலையை நோக்கி விரைந்தான். அவன் எண்ணங்கள் 'தன் திருமண வாழ்வின் இரண்டு வருடங்களின் பின்னர் முதல் பிள்ளையை பெற்றெடுக்கும் பாக்கியம் கொண்ட தந்தை' என்ற உளப் பூரிப்பில் வைத்தியசாலையில் காத்திருந்தவன் பிரசவத்திற்காக வீட்டில் வாங்கி வைத்த பொருட்களை எடுத்துவர விரைந்தவன் மீண்டும் தனது துவிச்சக்கர வண்டியில் அமர்ந்து எத்தனங்களை மிகவும் வேகமாக மிதித்தவனாய் வைத்தியசாலை விரைந்தான்.

கந்தசாமி வரும் போது வைத்திய சாலையில் காத்திருந்த நோயாளர்களும் பார்வையாளர்களும் தமக்குள் ஏதேதோ குசுகுசுவென கதைப்பதும் கந்தசாமியை குறிப்பாக பார்த்து நிற்பதும் சங்கடமாக இருந்தாலும் அவன் ஆனந்தத்தில் அங்கு மிங்குமாக சென்றவனாய் இருந்தான்.

அப்போது...

அவனின் நண்பர்கள் சிலர் அவனை நோக்கி வந்து கந்தசாமிக்கு சொல்லாது சொல்லிக் கொண்டார்கள் "கந்தசாமி உனக்கு அழகான பெண் குழந்தை பிறந்திருக்கு" என்றதும் தன் நண்பன் ஒருவனைக் கட்டி அணைத்தவனாய் கந்தசாமி ஆனந்தக் கண்ணீர் வடித்தான்.

தொடர்ந்த நண்பன் ஆனால்...... ஒரு கால் வலது பக்கம் கொஞ்சம் மெல்லியதாக உள்ளது. காலப்போக்கில் தானாக சரிவரும் என்றான். உடனே கந்தசாமி வாய்விட்டு அழுதவனாய் நண்பனை தள்ளி விட்டு கண்ணம்மா தங்கியிருந்த பிரசவ விடுதியை நோக்கி ஓடினான்.

கண்ணம்மா பெண் குழந்தையுடன் படுத்திருப்பதையும் தனது நண்பன் கூறியவாறு குழந்தையின் வலது கால் வளம் குன்றியிருப்பதையும் கண்டு கண்ணீர் விட்டு அழுதான்.

கண்ணம்மாவும் ஓவெனக் கதறி அழுதாள். எதுவும் பேச முடியாதவனாய் தனது தோளில் போட்டிருந்த துண்டினால் வாயை இறுக பற்றியபடி வெளியில் வந்தவன் காதில் வேல் பாச்சியது போல் சிலரது பேச்சு இருந்தது. "இஞ்சே பார்வதியக்கா அப்பன் அம்மை செய்த தவறு பிள்ளைக்கு தானே சேரும்" "என்ன கந்தசாமிக்கு முதல் பிள்ளையே ஊனமாம்" எனக் கூறி முகத்தை சுழிப்பதையும் பார்த்து வெம்பியவனாய் நடந்தான். கந்தசாமியின் காதுகளுக்கு கேட்ட இவ் வார்த்தைகள் வெந்த புண்ணில் வேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ச்சியது போல் இருந்தது. இவ் வார்த்தைகளை நினைத்து நினைத்து அழுது கொண்டிருந்தான்.

நாட்கள் உருண்டோட கந்தசாமி பிள்ளையின் மீது பாசத்திற்கு பதிலாக சினப்பதை உணர்ந்த கண்ணம்மா தானாகவே தனது அன்பு மகளுக்கு கடவுளின் துணை கொண்டு வெற்றிமகள் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தாள். இந்நாளில் கந்தசாமியின் குடும்பத்தில் வறுமை தாண்டவமாடியது. அதனால் வாழ்வில் நம்பிக்கை இழந்தவனாய் காணப்பட்ட கந்தசாமி எப்பொழுதும் கண்ணம்மா மீது "நச்" என்று எரிந்து விழுவதும், தனது மகள் மீது பாசம் காட்டாது சினந்து கொள்வதும் வழக்கமாயிற்று. கண்ணம்மா அவனுக்கு எதிர்மாறாக, பிள்ளை மீது பாசத்தை ஊட்டி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தாள். வெற்றி மகளின் தேவைகளை இனங்கண்டு "வலுவுற்றோருக்கான வாழ்வோதயம்" வழிகாட்டி நின்றது. முச்சக்கர வண்டியின் உதவியுடன் தனது வீட்டிற்கு அண்மையில் உள்ள முன்பள்ளியில் கல்வியை தொடங்கிய வெற்றிமகள் அப்பாடசாலை யில் சிறந்த பெறுபேற்றுச் சான்றுகளுடன் அருகில் இருந்த பாடசாலையில் தனதுஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து வந்தாள். பள்ளிப் படிப்பில் மிகவும் அறிவு நிரம்பியவளாகவும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கிய வெற்றித்திருமகள் அப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்கள் விரும்பத் தக்க ஒருத்தியாக வாழ்ந்து வந்தாள்.

தனது தாய் பாடசாலை முடிவடைந் ததும் சக்கர நாற்காலியில் அமர்த்தி தன்னை உருட்டி வருவது அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. எனினும் தன் கையின் உதவி கொண்டு வண்டியின் சக்கரத்தினை உருட்டியும் உதவி செய்து வந்தாள். கல்வி தான் எனது கண், எதிர்காலம் என்பதை உணர்ந்து மாலை நேரத்தில் தன்னுடைய வீட்டின் அருகில் உள்ள பொதுநூலகத்திற்கு சென்று தனது கல்வித் தேடல் தேவைகளை பூர்த்தி செய்து வந்தாள். வீதியால் செல்பவர்கள் உதவியுடன் முச்சக்கர வண்டியில் நூலகத் திற்கு சென்று வருவதை வழக்கமாக கொண்டிருந்தாள். நூலக உத்தியோகத்தர் களும் அவளது தேவையை உணர்ந்து அவளுக்கு உள்ளன்போடு உதவி வந்தனர். இவ்வாறிருக்கையில் ஒரு நாள் மாலையில் நூலகத்திலிருந்து வீடு திரும்பும் போது வெற்றிமகள் வருவதை உணராதது போல் கந்தசாமி அவள் மீது வெறுப்பு மிக்க வார்த்தைகளை வீசத் தொடங்கினார். "எண்டைக்கு எனக்கு இது வந்து புறந்துதோ அண்டைக்கே என்ர வாழ்க்கை சரி" "இஞ்சே கண்ணம்மா இந்த முடம் படிச்சு ஒண்டும் கிழிக்க போறேல்ல விளங்கிச்சோ" என்றும் கோபம் பொங்க கத்தினான். கண்ணம்மா கந்தசாமியை நோக்கி இரு கைகளையும் கூப்பியவாறு "இஞ்சாருங்கோ புள்ளையை அப்படி கதைக்க கூடாது." என்று கெஞ்சினாள்.

கண்ணம்மா என்றும் பிள்ளையின் மனம் பாதிப்படையாதவாறு நடந்து கொள்வாள். சக்கர நாற்காலியில் அமர்ந்து கொண்டே நூலகத்திலிருந்து எடுத்து வந்த புத்தகங்களை படித்து தனது அறிவாற்றலை மேலும் மேம்படுத்திக் கொண்டிருந்தாள் வெற்றிமகள். தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றுவதற் காக மேலும் சில விடயங்களை நூலக உத்தியோகத்தர்களினதும் ஆசிரியர்களினதும் உதவியுடன் கற்றுவந்த அவள் புலமைப்பரிசில் பரீட்சையை வெற்றி கரமாக சந்தித்து பரீட்சை முடிவுகளுக்காக காத்திருந்தாள்.

இவ்வேளையில் வழக்கம் போல் கந்தசாமி துவிச்சக்கர வண்டியின் உதவியுடன் வைத்தியசாலை முன்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள கடைக்கு சென்றான். அங்கு துவிச்சக்கர வண்டியை கடையோரத்தில் நின்ற வேப்பமரத்தின் கீழ் நிறுத்தி விட்டு கடையினுள்ளே நடக்கத் தொடங்கினான். அப்போது கந்தசாமியின் ஊரவரும் நெருங்கிய நண்பருமான ஒருவர் "என்ன கந்தசாமி உன்னுடைய மகள் புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதலாமிடமாம். வானொலியில் கேட்டேன்" என்றதும் கந்தசாமி பூரிப்படைந்தான். அங்கு நின்றவர்கள் அனைவரும் அவனை நோக்கி அசைந்து வருவதைக் கண்ட அவன் கண்கனை அவனால் நம்ப முடியவில்லை. ஆனந்தக் கண்ணீர் மல்க ஓவென்று அழுதான்.

அப்போது அங்கிருந்த ஒருவர் கந்தசாமி உன் மகள் உன்ர பெயரைக் காப்பாற்றிட்டு. எல்லாம் உன்னுடைய வளர்ப்பு தான் என்றதும் அழுதான். அனைவரும் அவனைக் கைலாகு கொடுத்து வாழ்த்தையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொண்டனர். கந்தசாமியோ விம்மி விம்மி அழுதவாறு துவிச்சக்கர வண்டியை எடுத்துக் கொண்டு பாடசாலை வீதியூடாக வீட்டை நோக்கி விரைந்தான். அத்தருணத்தில் பாடசாலை அதிபர் அவ் வழியே வருவதைக் கண்டதும் கந்தசாமி துவிச்சக்கர வண்டியை விட்டு இறங்கினான். அதிபரும் வண்டியை நிறுத்தி விட்டு " வணக்கம் கந்தசாமி அண்ணை வீட்டை தான் வந்தனான். வழியில் சந்தித்துவிட்டோம் எங்கட பாடசாலைக்கு என்றுமே அழியாத பெருமை தேடி தந்திருக்கிறீங்கள் என்றதும் கந்தசாமியின் கண்களிலிருந்து விழிநீர் மடை திறந்த வெள்ளம் போல் மகிழ்ச்சி கலந்த வேதனைக் கதறல் அவனைப் புடம் போட அதிபரிடமிருந்து விடைபெற்று வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் வீட்டின் அருகில் உள்ள நூலகத்தின் நூலகரை கண்டு விம்மி அழுதான்.

"அண்ணை உங்கட பிள்ளை நல்லா படிக்கும் எனக்கு அது என்றைக்கோ தெரியும் என்றதும் தான் மட்டும் தனது பிள்ளையை நம்பவில்லை என அழுதவனாய் வீடு சென்றதும் அவன் கண்ட காட்சிகளை அவனால் நம்பமுடிய வில்லை. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், கிராம அலுவலர் ஊர் பெரியவர்கள் என அனைவரும் தனது வெற்றிமகளை வாழ்த்தி பரிசில்களுடன் நிற்பதைக் கண்டதும் புழகாங்கிதமடைந்த கந்தசாமி ஓடோடிச் சென்று தன் மகளின் கால்களை இறுகப் பற்றி அவமானம் என்று நினைத்ததை மன்னித்து விடு மகளே...! தான் தவறு செய்து விட்டேன் எனக் கூறி கதறிக் கதறி அழுதான். மகளை கட்டி அணைத்து மாறி மாறி முத்தமிட்டான். கண்ணம்மாவின் கைகளை இறுகப் பற்றியவாறு மகளையும் அணைத்து அன்பு மழை பொழிந்தான். இத்தருணத்தில் கந்தசாமியின் சட்டைப் பையில் இருந்து தொலைபேசி அலறியது...

மறுமுனையில் மாவட்ட கல்விப் பணிப்பாளர்... ஜனாதிபதி விருது வழங்கல் நிகழ்வு நாள் செல்ல ஆயத்தமாகுமாறு கூற மறுபடியும் விம்மி விம்மி அழுத கந்தசாமி வெற்றிமகளின் கைகளை இறுகப் பற்றியவாறு நான் என்றும் உன்னுடன் உனக்காக வாழ்வேன் எனச் சத்தியம் செய்தவனாய் நின்ற போது வீதி வழியால் வந்த குளிர்கழி வண்டியின் ஒலிபெருக்கியில் அந்த வானுக்கு இரண்டு தீபங்கள் அவை தாயொடு தந்தையரே என அவன் காதில் தேனை வார்த்தது.

*************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோம்புகளுடாக அறியப்படும் திருக்கோணேஸ்வரம்

பேராசிரியர் செல்லையா கிருஸ்ணராசா
வரலாற்றுத்துறை - யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

## அறிமுகம்

தென்னாசியாவில் கோவில்கள் மனித வாழ்வின் உயிரோட்டமான மையங்களாக திகழ்ந்து வந்திருக்கின்றன. அவை காலங்களினூடே அவ்வவ் பிரதேச மக்களது வாழ்வு முறைகளை உருவாக்கி வளர்த்த களங்களாகவும் திகழ்ந்து வந்துள்ளன. இத்தொழிற்பாடனது தென்னாசியப்பிராந்தியத்தில் மனித நாகரிக வாழ்வின் ஆரம்பம் முதற்தொட்டே நிலைத்து வந்தமையையும் காணமுடிகின்றது. பின்னணியில் தென்னாசியாவின் தென்கோடியில் விரவிக் காணப்படும் மிகப்பழைய தொன்மை வாய்ந்த கோவில்களின் பங்களிப்புக்கள் பன் மொழி பேசும் மக்களது வாழ்வியலின் ஜீவனோபாய அடிப்படைகளை உருவாக்கிக் கொடுத்திருந்தமையை சான்றுகள் வாயிலாக கண்டுகொள்ள முடிகின்றது. இதற்கு சிறந்தவோர் எடுத்துக்காட்டாக ஈழத்தின் கீழ்த்திசையில் இசைமரபோடு இறையுணர்வினைப் பரப்பிக்கொண்டிருக்கும் திருக்கோணாதமலை, கோணநாதேஸ்வரப் பதியை செம்மையாகச் சொல்ல முடியும்.

இத்தீவின் பண்பாட்டுப் பரப்பிலும் நாகரிக வாழ்விலும் ஆதிக்கோண நாமேஷ்வரப்பதியின் சுவடுகள் காலத்தினாலும் அழிக்கப்பட முடியாதவனாக உள்ளன. இதற்கான அடிப்படையாது காலத்தின் வளர்ச்சிக் கட்டங்களுடாக அம் மையம் சிறப்பாகப் பெற்றிருந்த உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக வாணிபச்சூழலே ஆகும். பல இனத்தவர்களும், பன்மதத்தவர்களும், பல்வேறு நாட்டினரும் ஒருங்கே ஈர்க்கப்பட்டு வந்த மையமாதலால் கோணநாதஸ்வரப்பதியின் பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியில் அம் மையம் ஒரு சர்வதேச பண்பாட்டு வயப்பாட்டின் மரபின் வளர்சிசப் போக்கினைப் பெற்றுக் கொள்ள காரணமாயிற்று. உள்நாட்டு மாறுதல்களுடன் இவ்வளர்ச்சிப் போக்கும் இணைந்து ராஜீய- நிர்வாக உருவாக்கத்தின் களமாகவும் அம்மையம் வளரச்சிபெறக் காரணமாயிற்று. அப்பின்புலத்தில் கோணநாதேஸ்வரப் பதியையும், அதன் வளர்ச்சி நிலைகளையும் சர்வதேச சமூகமட்டத்திற்கு உட்ட வைத்த நிகழ்வுகளும் நடந்தேறின.

அந்நிகழ்வுகள் உள்ளிட்ட வளர்ச்சி நிலைகளின் வெளிப்பாடானது பண்பாட்டு அலைகளாக உள்நாட்டிலும்-வெளிநாட்டிலும் மக்களால உள்வாங்கப்பட்டு நிலைநிறுத்தி வைக்கப்பட்டிருந்நதன. அவ்வாறு நிலைநிறுத்தி வைக்கப்பட்டனவற்றுள் இன்று எமக்கு கிடைப்பவை அத் தலத்தை பற்றிய மான்மிய இலக்கியங்கள், பதிகங்கள், கல்வெட்டுக்கள், விக்கிரகங்கள், தோம்புப் பதிவுகள், வெளிநாட்டுப் பயணிகளின் பிரயாணக் குறிப்புக்கள் என்பனவாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு கோணநாதஸ்வரப் பதியின் தோற்றம், வளர்ச்சி, மற்றும் அதன் சொத்துக்கள், வருமான நிர்வாகப் பகிர்வு முறைகள் போன்றவற்றை ஆராயமுடிகின்றது. ஈழத்து இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியத் தேடலில் கோணநாதஸ்வரப் பதியின் தோட்டமானது சர்வதேச ரீதியிலான ஒப்புதளிக்கப்பட்ட அங்கரிக்கப்பட்ட தனத்துவமான பண்பாட்டுச் சின்னமாக காணப்படுவது இன்றைய காலகட்டத்தில் பலவழிகளிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது.

ஈழத்துநிலவரம்பிற்குள் உட்பட்ட இடப்பெயர்- பெயர்த் தோற்றம் பற்றிய ஆய்வுகள் பெருமளவிற்கு இன்று பாளி - பௌத்த, வடமொழி அடிப்படையிலான உருவத் தோற்றமுடையனவாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் ஈழத்திற்கு மிகவும் அண்மித்த பெருநிலப்பரப்பான தமிழகத்தின் அல்லது தென்னியந்தியக் குடியமைவின் பண்புகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே ஈழத்தின் குடியமைவின் போக்கினை நிர்ணயித்து வந்துள்ளன என்பதனையும் மறந்துவிடலாகாது. அண்மைக்காலத்தில் இப்பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் அவ்வுண்மையை தெளிவுபடுத்தியுள்ளன. தென்னிந்தியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலங்குடிகளின் தன்மைகள் - ராஜீய முறைமைகள் ஈழத்தை நன்கு பாதித்து சென்றுள்ளன என்பதனை அவ்வாய்வறிக்கைகள் நிரைப்படுத்தியுள்ளன. திருக்கோணேஸ்வரம் பதியின் பெயர்த் தோற்றம் பற்றிய ஆய்வும் இப்பின்னணியிலேயே நோக்கப்படுதல் வேண்டும்.

இதுவரையில் திருக்கோணேஸ்வரம் என்ற பெயரத்தோற்றம் தொடர்பாக வெளிப்படுத்தப்படாத ஓர் அம்சத்தினை இங்கு தருவது பொருத்தமாகின்றது. இராமச்சந்திர தீட்சிதர் சிலப்பதிகாரத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பிற்கு வரைந்த தனது அறிமுகவுரையில் திரிலோகண பல்லவ வம்சத்தினைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். கி.பி 5ம் நூற்றாண்டில் இருந்த திரிலேகண பல்லவ வம்சத்தின் இடம் தாயகம், தலைநகர், அதிகார வரம்பு பற்றிய எந்த விடயங்களும் இன்னும் தென்னிந்திய வரலாற்று வெளிச்சத்திற்குள் அகப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ள தீட்சிதர் சங்ககாலத்து சோழ இளவரசனான கரிகாலவளவனது ஆட்சிக்குச் சற்று பிற்பட்டதாக இவ்வம்சம் வாழ்ந்திருக்க வேண்டும் என முடிவு கொள்கிறார். அவருடைய இத்தகைய ஓர் அனுமானமானது ஆதிபல்லவ வம்சம் ஒன்றினது ஈழத்தொடர்பின் பின்னணியில் திருக்கோணேஸ்வரத்தின் பெயர்த் தோற்றத்திற்கான ஊற்றினைக் கண்டுகொள்ள வழிவகை செய்கின்றது எனலாம். திருக்கோணேஸ்வரப் பிராந்தியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கல்வெட்டுச் சான்றுகள், மற்றும் தொல்லியல் சான்றுகள் எமக்கு திரிலோகண பல்லவ வம்சத்துடன் திருக்கோணேஸ்வரத்தினைத் தொடர்புபடுத்தி பார்ப்பதற்கு உதவுகின்றனவா என ஆராய வழிவகை செய்கின்றன.

திரிலோக பல்லவ வம்சமானது சங்ககாலத்து சோழ இளவரசனான கரிகால்வளவனது ஆட்சிக்குப் பிற்பட்டது என்பது இராமச்சந்திர தீட்சிதருடைய கருத்தமைவாகும். சிலப்பதிகாரத்தின் தோற்ற காலமும் ஈழத்து திரிலோக பல்லவ வம்சகாலமும் ஏறக்குறைய சமகாலமாகலாம். செ. இராசநாயக முதலியார் முன்வைத்துள்ள "மணிபல்லவம் - பல்லவ வம்சத்தின் தாயகம்" என்ற கோட்பாடும் ஓரளவிற்கு இராம்ச்சந்திர தீட்சிதருடைய திரிலோக பல்லவ வம்ச காலத்தினை எட்டியதாக இருப்பதும் இங்கு நோக்கத்தக்கது.

## திரிலோகணம்
## ஆதிபல்லவ வம்சத்தின் துறைமுக நகர்

செ. இராசநாயகம் முன்வைத்த "மணிபல்லவம் : பல்லவரது தாயகம்" என்ற கோட்பாடானது படிப்படியாக தொல்லியற் சான்றுகள் வாயிலாக ஈழத்தில் வலுவடைந்து கொண்டு வரும் இக்கட்டத்தில் "திரிலோக பல்லவர்" பற்றிக் கிடைத்த தகவலானது ஈழத்து வரலாற்று ஆய்விற்குப் புதிய சான்றாக அமையும். பல்லவ பண்பாட்டின் வெளிப்பாட்டிற்குரிய சின்னங்களாக நாகதீப கலசங்கள் இம்பர்சிட்டி — வியாபாரி மூலையில் இருந்து அண்மைக் காலத்தில் வெளிப்படுத்தப்பட்டன. வியாபாரி மூலைக்கும் திருக்கோணேஸ்வரத்திற்கும் இடையே மிக நெருக்கமான தொடர்புகள் இருந்துள்ளன. புலோலி — பலப்பைக் கிராமத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பல்லவர் பாணிக்குரிய போதி மாதவனின் சிரசு கிடைத்திருப்பது இப்பிராந்தியத்தில் பல்லவர் கலை மரபின் செறிவினைக் காட்ட உதவுகின்றது எனலாம்.

வடமராட்சிக் கிழக்கில் உள்ள கரையோரக் கிராமமான அம்பன் என்ற பெயர் உடைய மாகாணப்பிரிவு தென்கிழக்காசிய நாடுகளுள் ஒன்றான யாவாத் தீவினது மையப் பகுதியில் காணப்படுகிறது. வடமாராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணியை அடுத்துக் காணப்படும் மண்டலாயப் பிள்ளையார் கோவில் மத்தியாவாவிலுள்ள பிள்ளையார் வணக்க முறைகளுடன் தொடர்புபட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இவையாவும் பல்லவப் பண்பாட்டின் கடல் கடந்த செல்வாக்கினடியாகவே ஈழத்திலும் நிலை பெற்றிருந்தன இவற்றுக்கெல்லாம் தொடர்புகளை ஏற்படுத்தித்தந்த வட கிழக்குக் கரையோரத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகங்கள் யாவும் பல்லவ வம்சத்தின் மேலாதிக்கத்தின் கீழேயே அதன் செல்வாாக்கிற்குட்பட்டிருந்தது. என்றால் அது மிகையாகாது. அவ்வகையில் வட கிழக்குக் கரையோரத்துறைமுகங்களுள் எல்லாம் திருக்கோணேஸ்வரம் மிகவும் வாணிகர்களினால் விரும்பப்பட்டதாகவும் இருந்து வந்துள்ளது. அவ்வகையில் திரிலோகண பல்லவ வம்சத்துடன் தனது வளர்ச்சியையும் செல்வாக்கையும் இணைத்து ஒரு சிறந்த துறைமுக நகராகவும் அதே நேரத்தில் புனித ஸ்தலமாகவும் மாறியிருந்த திருக்கோணேஸ்வரம் மக்கள் மத்தியில் பெருஞ்செல்வாக்கினை பெற்றுக்கொண்டதில் வியப்பேதும் இருக்க முடியாது.

தமிழகத்தில் களப்பிரின் மேலாதிக்கம் நிலைபெற்றிருந்த காலப்பகுதியில் ஈழத்தின் கிழக்குக் கரையில் திரிலோகணம் எனப்பெயர் பெற்றிருந்த திருக்கோணேஸ்வரம் ஒரு துறைமுக நகராக பொலிவுற்றுச் சிறப்படைந்திருக்க வேண்டும். களப்பிரரின் தாக்கத்திலிருந்து ஆதி பல்லவ வம்சம் தம்மைப் பாதுகாத்து வளர்த்தெடுத்துக் கொண்ட ஒரு மையமாகவும் அமைந்திருக்க வேண்டும். பல்லவங்க, பல்லவபொக்கு, பல்லவராயன்கட்டு போன்ற மையங்கள் திருக்கோணேஸ்வரத் திருப்பதியின் அண்மித்த குடியிருப்புக்களாகும். இவை யாவும் பல்லவர் காலத்து வாணிப மையங்கள் என்பது இங்கு நோக்கத்தக்கது. இவ்மையங்கள் **யாவும் முக்கந்தர்** என்ற உயர் தலைமையின் கீழ் பெரு வாணிப நடவடிக்கைகளுக்கு உட்பட்டிருந்தன என்பதனை இலக்கியச் சான்றுகளினூடாக கண்டுகொள்ள முடிகின்றது.

முதற்பெயரான "திரிலோகணம்" என்பதில் உள்ள "கணம்" பெயரீறு வணிகக் கணத்தினைச் சுட்டுவது எனக் கொண்டால் அதனை விசேடித்து நிற்கும் "திரிலோ" என்பது "திரைலோக்கிய" என்ற பதத்தின் மருவுப் பெயராகவே அமையும் எனலாம். இப்பெயர் பொதுவாக அரசவம்சத்தை சேர்ந்த பெண்களின் பெயராகவோ அன்றி ஓர் இனப்பெயராகவோ குறிக்கப்படுதலையும் காணலாம். "திரைகடல் ஓங்கி நித்திலங் கொழிக்கும் கோணமாமலை" யின் பெயர்த் தொடக்கம் திரைலோக்கிய கணமாகிப் பின்னர் திரிகோணம் என மருவிற்று என்று கொள்வதே பொருத்தமானதாக தோன்றுகின்றது.

அவ் வகையில் "திரிலோகணம்" என்ற பெயர் கி.பி 5ஆம் நூற்றாண்டில் நன்கு நின்று நிலைபெற்ற ஒன்று எனக் கொள்வது இவ்வாய்வுக்கு பொருத்தமாகின்றது. இப்பின்னணியில் திருக்கோணேஸ்வரம் பற்றிய பிற்பட்ட காலவரலாற்றினையும் கிடைத்த தோம்பு ஆவணங்களுடாகவும் ஆராய முடிகின்றது. திருக்கோணேஸ்வரப் பதியும் முக்கந்தர் என்ற வாணபத் தலைவர்களினால் நிர்வகிக்கப்பட்ட செய்தியை பல்லவர்கால சமூகவரலாறு உறுதிப்படுத்துவதனை பேராசிரியர் மோஸஸ் பொன்னையா என்பவர் தனது நாடார் வரலாறு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## தோம்பு ஆவணம்

திருகோணமலை கோணநாதேஷ்வரர் சிவன் கோவிலின் "தொண்டு"- தொழும்பு பற்றிய பல விபரங்களை கோணேசர் கல்வெட்டு போன்ற இலக்கியச் சான்றுகள் விபரமாக எடுத்துக் குறிப்பிடப்பட்டிருந்தும், போத்துக்கீசர் காலத்தில் தொடங்கப் பெற்ற கலையழிவுக் கொள்கைக்குப் பயந்து கோணநாதேஷ்வரர் சிவன் கோவிலைப் பற்றிய தகவல்கள் குறிப்பாக தம்பலகாமம் சிவன் கோவிலைப் பற்றியதும் அதற்குரிய தேவஸ்தான வயல் நிலங்கள் உட்பட அசையும் அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் யாவும் ஓலைச் சுவடிகளில் எழுதிப் பாதுகாக்கப்பட்டன. அவை பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் தோம்புப் பதிவேடுகளாக முத்திரைகள் குத்திப் பாதுகாக்கப்பட்டுள்ளன. பின்னர் அத் தோம்புச் செய்திகள் யாவும் ஆங்கிலேயர் காலத்தில் கோயிற் பதிவுப் புத்தகங்களில் நிரைப்படுத்தப்பட்டு கோவைப்படுத்தப்பட்டன. கி.பி 1800ஆம் ஆண்டளவில் கோயிற்புத்தகங்கள் (Temple Register) கச்சேரி ரீதியாக இத்தகைய பாவனைக்காக இடப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் ஒல்லாந்து அரச முத்திரையுடன் கூடிய தோம்புகளாகவும் அவை பின்னர் படியெடுக்கப்பட்டு இருந்த ஆவணப்படிவங்களாகவும் (உறுதிகளாகவும்) நீண்ட காலமாக தம்பசிட்டி — வியாபாரி மூலையிலுள்ள அமரர் சொக்கநாதம்பிள்ளை அவர்களின் வீட்டில் பாதுகாக்கப்பட்டிருந்தன. அவரது இல்லம் முழுவதுமே ஓர் ஆவணகாப்பக மையமாக விளங்கியிருந்தது. அவரது அமரத்துவத்தின் பின்னர் அந்நிலையானது முற்றாகவே சீர்குலைந்து விட்டது. அந்த வகையில் நாம் ஏற்கனவே அவருடன் கொண்டிருந்த நெருக்கமான தொடர்பின் அடிப்படையிலே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆவணப்பிரதிகளை பார்த்து படியெடுப்பதற்கு வாய்ப்பாக இருந்தது. இவ்வாறு சேகரிக்கபட்ட வரலாற்றுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே தம்பலகாமம் ஆதிக் கோணநாதேஸ்வரர் கோயில் நிர்வாகம் தொடர்பான குறிப்புக்களை விபரண ரீதியாக இற்கு தரமுடிகின்றது. அவற்றை வரலாற்று மூலம் என்ற வேரடிப்படையில் ஈழத்தமிழரது பண்பாட்டு எழுத்தியலுக்கு உதவும் ஆதாரமாகக் கொள்வதற்கு வாய்ப்பாகின்றது.

## தோம்புப் பதிவின் தொடக்கவுரை

திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் சிவன் கோயில் தொடர்பான சாதனங்கள் யாவற்றிலும் வரலாற்றுப் பெறுமதிமிக்க தொடக்கவுரையாக இத்தோம்பின் ஆரம்பம் இடம் பெற்றமையை அவதானிக்க முடிகின்றது. திருகோணமலையைப் பற்றிய வரலாற்றாய்வுக்கு அப்பகுதி பெருமளவிற்கு உதவுவதாகவுள்ளது. இப் பகுதி பின்வருமாறு:-

1. "திருக்கோணாதமலையை சேர்ந்த தம்பலகபமக் கோயிற் குடியிருப்பில் சைவ சமய பிரபல்யமாய் விளங்கும் கோண நாதேஸ்வர சுவாமி கோயிலுக்கு....."
2. "சூரிய— சந்திர— அக்கினி வம்சத்திலே சிரேட்டமாகிய சூரிய குலத்து மனுநீதிச் சோழமஹாராசன் மரபிலுதித்த கஜவாகு மஹாராசாவின் தெக்ஷ்ணகைலாயம் கோண நாதேஷ்வர சுவாமி கோவிலுக்கு....."

இவ்வாறு பதியப்பட்டுள்ள முகப்புரை பாரம்பரியமாகவே உள்வாங்கப்பட்டு வந்த வரலாற்று மரபினை தோம்புகள் வெளிப்படுத்துவதாக உள்ளன. கந்தளாயில் கிடைத்த சோழக் கல்வெட்டுக்களில் குளக்கோட்டனைப் பற்றியதும் கயவாகு மன்னனான இரண்டாம் கஜவாகு பற்றியதுமான செய்திகளில் இத்தோம்பில் இடம்பெற்றுள்ள சில செய்திகள் இடம்பெற்றிருப்பது மேலே கூறப்பட்டவற்றுடன் ஒப்பு நோக்கி மேலும் ஆராயத்தக்கதாகும். தோம்பிலும் உரிமைச்சாசன பட்டயமொன்றிலும் பதியப்பட்டுள்ளன. வரலாற்றுச் செய்திகள் பின்வருமாறு தொகுத்து வகுத்து தரப்படுகின்றது. அவை பின்வருமாறு:-

".....எப்பொழுதும் பூசகராகவும், முதன்மையாகவும், "இராசகுலகுரு" என்னும் சகல பொருட்களையும் அதிகாரமாக நின்று நடப்பித்து அவ்வாதனங்களின் வருமானத்தில் பத்திலிரண்டு பங்கும் பிரயோஜனம் தங்களுபயோகங்களுக்கென்றும் மற்றைய எட்டுப் பங்கும் கோயிற்பூசை,உற்சவம், திருப்பணி போன்ற சகல காரியங்களுக்கென்றும் எம்முன்னோர் சாதனம் எழுதிக்கொடுக்கப் பெற்றவர் ஆகையாலும் அவ்வுரித்தின் பிரகாரம் கோணநாதேஷ்வரப் பெருமானின் கல்வெட்டிலும் புராணத்திலும் சொல்லிய....."

"..... குறித்த கோவிலுக்கும், கோவிலின் கல்வெட்டிலும், புராணத்திலும் சொல்லிய இருபாகை முதன்மைக்கும் செய்ய வேண்டிய பணிவிவடைகளைச் செய்வதற்கு ஏற்படுத்தப்பட்டிருப்பவர்களாகிய கனகசுந்தரப் பெருமாள் கோயிற் பராமரிப்புக்காரர்கள், கரணம், அடப்பற்தாளத்தார், வரிப்பத்தார், சங்கமம், குருநாடு, சிந்துநாடு, கட்டுக்குளப்பகுதி, முதலிய பரிசாரகர்களை கொண்டு குறித்த கோவிலின் கல்வெட்டிலும், வேதம், ஆகமம், புராணம், ஆகியவற்றிலும் சொல்லிய படியும் வழமைப்படியும், மேற்குறித்த....."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...... குறித்த கோவிலின் ......மேற்காட்டிய பணிவிடைக்காரரிடமிருந்து அக்கோயிலில் நடக்க வேண்டிய பூசை, திருவிழா முதலியவற்றையும், கந்தளாய்க் குளத்திலும், மாகாமத்திலும், காலத்துக்குக் காலம் நடக்க வேண்டிய வேள்விகள், கிராம சாந்திகள், முதலியனவற்றையும், ஆடிப் பத்தினியம்மன் வேள்விகள் முதலியவற்றையும், திருக்கோணாதமலை கொட்டியாரப் பற்றில் கங்குவேலி சிவன்கோவில், மேற்படிப்பற்றில் வெருகல் சித்திர வேலாயுதசுவாமி கோவில் ஆகிய அவைகளின் பூசை திருவிழாக்களையும். ஆடி அமவாசைத் தீர்த்தங்களுக்குரிய கிருத்தியங்களையும் மேற்காட்டிய பணிவிடைக்காரரிடமிருந்து செய்தும் செய்வித்தும் வருபவர்களுக்கும் வேதம், ஆகமம், புராணம், கல்வெட்டில் சொல்லிய பிரகாரமும் வழமைப் பிரகாரமும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்விப்ப தற்காக" (33 ஊர்களில் உள்ள 33 பேர்களை) "பராமரிப்புக்காரர்களாக நியமிக்கத் தீர்மானித்து மேற் சொல்லப்பபட்ட பேர் வழிக்காரர்களை பின்னால் சொல்லப்படும் காரியங்களை நடத்துவதற்காக..... இத்தால் பெயர் குறித்து நியமித்து ஏற்படுத்தி அதிகாரம் கொடுக்கின்றேன்"

அவ்வதிகாரங்கள்.

அ) குறித்த கோவிலுக்குத் தொகுப்பாளராகிய கனகசுந்தரப்பெருமாள் கோயிற் பராமரிப்புக்காரர், கங்காணம், அடப்பன் தாளத்தார், பாரிப்பத்தார், சங்கமம், குருநாடு, சிந்துநாடு, கட்டுக்குளப் பகுதி முதலிய பரிசாரர்களாகிய இவர்கள் குறித்த கோணநாதேஷ்வர சுவாமி கோவிலுக்கும், இருபாகை முதன்மையாகிய எனக்கும் எனது பின் சந்ததியாருக்கும் குறித்த வேதம், ஆகமம், புராணப் பிரகாரமும் கோயிலின் கல்வெட்டுப் பிரகாரமும் வழமைப் பிரகாரமும் அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை அவர்களைக் கொண்டு விதிப்படியும் முறைப்படியும் செய்விக்க.

ஆ) குறித்த கோணேஸ்வர சுவாமி கோவிலினதும் கங்குவேலிச் சிவன் கோவிலினதும் வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோயிலினதும் கந்தளாய்ப் பிள்ளையார் கோவிலினதும் பாவிப்புக்காகவுள்ள சகல அசைவற்ற ஆதனங்களையும்...... குத்தகை கொடுக்கவும் குத்தகைப் பணங்களை அறவிடவும் பற்றுச்சீட்டக் கொடுக்கவும் அந்தந்தக் கோவில்களின் வருமானங்களிலிருந்து அந்த(ந்த) க் கோவில்களின் பூசைகள் ஆடி அமாவாசைத் தீர்த்தங்கள், கிராம சாந்திகள், வேள்விகள் இன்னும் அநேக வேதாகாரச் சடங்குகளையும் குறித்த கோவிலின் திருப்பணிகளையும் வேதம் - ஆகமம் - புராணம் - கல்வெட்டு வழமையாகிய இவைகளுக்கு அமையச் செய்விக்கவும்.......

இ) குறித்த கோவில்களின் தொகுப்பாளர்கள் தங்கள் தங்கள் கடமைகளைச் செய்யத் தவறினால் அவர்களை... நட்டம் அல்லது நட்டங்களை அறவிடவும், அவர்களைக் கொண்டு குறித்த கருமங்களை விதிப்படி செய்விக்கவும் மன இணக்கமாய் செப்பம் பண்ணி வைக்கவும், அப்படிக் குறிறம் செய்தவர்களை நீக்கி அவர் அல்லது அவர்களின் இடத்துக்குப் பதிலாக அக்குடும்பத்திலே பதிலாளிகளைத் தெரிவு செய்து நியமிக்கவும் அவ்வண்ணம் நீக்கப்பட்டவருக்குக் கோவிலால் விடப்பட்டிருக்கும் காணிகளை அல்லது வருமானங்களை அவர்களிலிருந்து எடுத்துப் பதிலாக வைக்கப்பட்டவர்களுக்கு ஒப்புக்கொடுக்கவும்.

ஈ) இருபாகை முதன்மையாகிய எனக்கு அல்ல எனது பின் சந்ததி அல்லது சந்தானங்களுக்கு உதவி தேவை என விரும்பிய காலங்களில் உதவிக்காக வந்திருக்கும் பூசகர், குருமார்கள், சாதகாசாரியார், அலங்கிருதாசாரியார், போதகாசாரியார் முதலிய இவர்கள் இருபாகை முதன்மைக்குத் தேவையான உதவிகளைச் செப்பமாய்ச் செய்ய வேண்டும். அவ்வண்ணம் செய்யாமலிருந்தால் அல்லது செய்யத்தவறினால் இருபான்மை முதன்மையாகிய அவர்களுடைய முத்திலிரண்டு பங்கால் அல்லது குறித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலினுடைய பத்திலெட்டுப் பங்கால் அவர்கள் பொறுப்பில் விடப்பட்ட வருமானங்கள் அல்லது ஆதனங்களைக் குறித்த தத்துவக்காரர் அவர்களிலிருந்தெடுத்து பத்திலிரண்டு பங்கு ஆதனத்திலிருந்து கொடுபட்டால் இருபாகை முதன்மையாகிய எனக்கும் அல்ல எனக்குப் பின் எனது பிற்சந்ததி அல்லது சந்தானத்துக்கும் பத்திலெட்டுப் பங்கு ஆதனத்திலிருந்து கொடுக்கப்பட்டால் குறித்த கோவிலுக்கும் சேரும் படி செய்ய வேண்டும்.

உ) குறித்த கோயில்களுக்குரிய ஆதனங்களைப் பற்றிய நீர்ப்பாச்சல் வட்ட விதானையிடம் இருக்குமிடாப்பில் சொந்தக்காரன் என்ற பந்தியில் முதன்மையாகிய நானே குறித்த கோயில்களின் வகைக்காக கையொப்பமிட வேண்டியிருப்பதனால் குறித்த பந்தியில் மேற்சொல்லிய அவர்களில் எவராவது ஒருவர் அல்லது இருவர் குறித்த முதன்மையின் வகைக்காக கையொப்பமிடுவதாக......

ஊ) .... மன இணக்கமாக குறித்த கருமங்களை நடப்பிக்கத் தவறினால் அல்லது அவர்களுக்கிடையில் ஏதும் வாக்குவாதம் வந்தால் அல்லது... எவராவது இறக்கச் சம்பவித்தால் அல்லது வேறெவ்வகையாகவேனும் ஒருமித்து அல்லது அவர்களிலாதிக்கத்திலிருப்போர்..... அவர்களுக்குள் நான்கு பேருக்கு அல்லது மூன்று பேருக்கு அதிகாரம் கொடுத்து குறித்த கருமங்களை அல்லது அவைகளின் எப்பகுதியையேனும் வெயிவிக்க .... இவர்களுக்கு அதிகாரமுண்டு...

எ) குறித்த கோவில்களிடாக இருப்பு வீடுகள் கட்டி, அந்தந்தக் கோவில்களின் சகல வருமானங்களையும் நோட்ட — சீட்டு மற்றும் அந்தக் கோவில்களுக்குரிய சாதனங்கள், உறுதிகளையும் அந்ததந்தக் கோவில் இருப்பு வீட்டினடமாக வைக்க வேண்டியது. குறித்த இருப்பு வீடுகளுக்குள்ள இரண்டு துறப்புக்களில் ஒன்று இருபாகை முதன்மையாகிய என்னிடமும் மற்றது .... ஒருமித்து நியமிக்குமொருவரிடமும் இருக்க வேண்டியது. குறித்த கோவில்களில் நேர் கடனுக்காக வரும் ஆடு, மாடு, கோழி, முதலியவைகளை இன்னும் வேறு சாமான்களையும் ஒருங்கு சேர்த்து அவைகளில் கோவிலுக்குத் தேவையானவற்றை வைத்துக் கொண்டு மிகுதியை விற்றுக்கோவிலுக்கு வேண்டியவற்றை செலவு செய்து மிகுதியை இருப்பு வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

ஏ) குறித்த கோவில்களுக்குரிய நகைகள், பட்டுவஷ்திரங்கள், திருவாசி முதலிய சகலமும் மற்றும் தட்டுமுட்டுச்சாமான்கள் சகலமும் கோவிலின் இருக்கு வீட்டில் இருக்கும் படி செய்ய வேண்டும்.

ஐ) குறித்த கோவில்களின் வருமானங்களைப் பற்றிய வரவு — செலவுக் கணக்குகளை வெளிப்படுத்தும் படி கேட்கும் காலம் இவர்கள் அக்கணக்குகளை வெளிப்படுத்தவும் கணக்குக் கொடுக்கவும் இருபாகை முதன்மையாகிய எனக்கும்..... எனது சந்ததி அல்லது சந்தானத்துக்கும் பாத்திரவாளிகளாயிருத்தல் வேண்டும்.

ஒ) குறித்த.... கோவில்களிடாக இருப்பு வீடுகள் கட்டி, அந்தந்தக் கோவில்களின் சகல வருமானங்களையும் நோட்டு — சீட்டு மற்றும் அந்தக் கோவில்களுக்குரிய சாதனங்கள், உறுதிகளையும் அந்தந்தக் கோவில் இருப்பு வீட்டினிடமாக வைக்க வேண்டியது குறித்த இருப்பு வீடுகளுக்குள்ள இரண்டு துறப்புக்களில் ஒன்று - இரு பாகை முதன்மையாகிய என்னிடமும் மற்றது ... ஒருமித்து நிமதிக்குமொருவரிடமும் இருக்க வேண்டியது. குறித்த கோவில்களில் நேர்கடனுக்காக வரும் ஆடு, மாடு, கோழி முதலியவைகளை இன்னும் வேற சாமான்களையும் ஒருங்கு சேர்த்து அவைகளில் கோவிலுக்குத் தேவையானவற்றை வைத்துக் கொண்டு மிகுதியை விற்றுக் கோவிலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டியவற்றை செலவு செய்து மிகுதியை இருப்பு வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

**மேற்சுட்டிய ஆதனம் வருமாறு**

1) திருகோணமலை தம்பலகாமப் பற்று தம்பலகாமம் கோண நாதேஷ்வரசுமாமி கோவிலாதனமாய் அக்கோயிலின் ஏக பூசகரும் இருபான்மை முதன்மையும் என்னும் அதிகார முறைப்படி எனது உரிமையாட்சியின் காணி கீழ்மாகாணம் திருக்கோணாத மலை டிஸ்திரிக் தம்பலகாமப்பற்றுமாக்கை வெளியிலிருக்கும்.
பெத்தராசி வயல் எனும் ஒரு துண்டு நிலம் - இதற்கு எல்லை வடக்கும் கிழக்கும் மாக்கைத்திடல் தெற்கு குடமிருட்டியாறு மேற்கு ஆற இவ்வெல்லை பூண்டு காணியின் சொரியலாய் ஆறிலொரு பங்கு

2) தம்பலகாமம் மாக்கை வெளியிலிருக்கும் பெரிய ஆண்டி வெட்டுவன் என்னும் ஒரு துண்டு வயல் நிலம், எல்லை கிழக்கும் வடக்கும் வெட்டுக்காடு மேற்கு ஆறு தெற்கு வீரக்குட்டிக்கும் கணவதிப்பிள்ளைக்கும் உடைய வயல்.

3) தம்பலகமம் மாக்கை வெளியிலிருக்கும் சின்னாண்டி வெட்டுவன் என்னுமொரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கும் வடக்கும் கந்தர் கீத்து மேற்கு கோணநாயகர் கோவில் பிற்பாகைக்குரிய முதலயார் வயல், தெற்கு முத்துக்குமார சுவாமி கோயில் வயல்.

4) தம்பலகமம் மாக்கை வெளியிலிரக்கும் காட்டுக்கும்பியன் வயல் என்னும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கும் தெற்கும் கோணநாயகர் கோயில் வயலும் மறுபேருடைய வயலும் மேற்கு வாய்க்கால் வடக்கு பச்சன் பவரை.

5) தம்பலகமம் மாக்கை வெளியிலிருக்கும் பெரிய வெட்டுக்காடு என்னுமொரு துண்டு வயல் நிலம் மேற்கு முடிக்குரிய தரையும் உதுமாகலெவ்வை காஜியாரின் தரையும் வடக்கு பச்சன்பவரை தெற்கும் கிழக்கும் வெறுவயல்.

6) தம்பலகமம் பற்ற வெளியிலிருக்கும் ஓலுக்குனி என்னும் ஒரு வயல் நிலம் எல்லை கிழக்கு வீரக்குட்டியின் சுவாத்தியர் வரை வடக்கு ஆறு மேற்கு அப்புக்குட்டி மரிக்காரருக்கும் வேகன் கணபதிப்பிள்ளைக்குமுடைய வயல் தெற்கு பக்கீர்த்தம்பியின் கரையான் வயல்.

7) தம்பலகமம் பற்றவெளியிலிருக்கும் கரையான் வெட்டுக்காடு என்னும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கு கோணநாயக்கர் கோயில் பிறப்பாகைக்குரிய மந்தணடைக்கீத்து வடக்கும் மேந்கும் ஆறு தெற்கு சபாபதிப் பிள்ளையின் தரை.

8) தம்பலகமம் பண்டார வெளியிலிருக்கும் கொண்டு முனைப்பகுதி என்னும் ஒரு துண்டு வயல் நிலம் கிழக்கும் தெற்கும் ஆறு மேற்கு கோணநாயக்கர் கோயிலுக்குரிய அட்டீமயோடைப்பகுதி வயல் வடக்கு கோயிற் பிறப்பாகைக்குரிய மணற்பகுதி வயல்.

9) தம்பலகமம் பண்டார வெளியிலிருக்கும் பிரமணன் கீத்து என்னும் ஒருதுண்டு வயல் நிலம் எல்லை வடக்கு கட்டை வயல் கிழக்கு வல்லிபுரத்தின் தரை தெற்கு கோணநாயகர் கோயில் வயல் மேற்கு வாய்க்கால்.

10) தம்பலகமம் பற்ற வெளியிலிருக்கும் உப்புக்குழி என்றழைக்கப்படும் ஒரு துண்டுவயல் நிலம் எல்லை வடக்கு சிறுபயனி ஆறு மேற்கு பொன்னுச்சாமி குருக்களின் தரை தெற்கு கோயில் வீதி கிழக்கு கோயிலுக்குரிய தரை.

11) தம்பலகமம் பற்ற வெளியிலிருக்கும் மாந்தோட்டடியான வயல் நிலம் எல்லை கிழக்கு கோயிலுக்குரிய தாமரைப்பள்ளம் வடக்கு கோயிலுக்குரிய தெளவில் வெட்டுவான் வயல் மேற்கு காதர் தாமோதரம் பிள்ளையின் வயல் சின்ன அணை வெட்டுவான் வயல். வயல் நிலம் எல்லை கிழக்கு கோயிலுக்குரிய தாமரைப்பள்ளம் வடக்கு கோயிலுக்குரிய தெளவில் வெட்டுவான் வயல் மேற்கு காதர் தாமோதரம் பிள்ளையின் வயல் தெற்கு சின்ன அணை வெட்டு வான் வயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) தம்பலகமம் பண்டார வெளியிலிருக்கும் சின்ன அணை வெட்டு வான் பெரிய அணை வெட்டுவான் என்றழைக்கப்படும்.ஒரு துண்டு வயல் எல்லை கிழக்கு கோயில் வயலும் ஆறும் வடக்கு மாந்தோட்டியான் வயலும் காதர் தாமோதரம் பிள்ளையின் வயலும் தெற்கு ஆறும் பழனியப்பரின் தரையம் மேற்கு கோயில் பிரம்பருங்காட்டுக் கீத்து.

13) தம்பலகமம் சம்பந்துறையில் பிராமணன் கீத்து என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் நிலம் எல்லை கிழக்கு வெட்டுக்காட்டு தரை மேற்கு கட்டை வயல் வடக்கு மூக்கறுத்தலைவரை தெற்கு பண்டாரியாக் கீத்து.

14) தம்பலகமம் பண்டார வெளியில் பெரிய பகுதி மணற்பகுதி என்றழைக்கப்படும் ஒரு துண்டு தரை வயல் தரை எல்லை வடக்கு கட்டாடிக்கீத்து என்றழைக்கப்படும் வயல் தெற்கு கொட்டுமுகப்பகுதி வயல் கிழக்கு சிறு பயனி ஆறு மேற்கு களத்துத்தரை.

15) தம்பலகமம் பற்றவெளியில் உள்ள மந்தண்டைக்கீத்து என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் தரை எல்லை வடக்கு இதரம்பள்ளம் என்றழைக்கப்டும் கோயில் வயல் தெற்கு சிறுபயனி கிழக்கு கோயில் சூகர வேட்டை (சூரசங் கார வேட்டை) த்தரை ஆமற்கு கரையான் வெட்டுக்காடு.

16) தம்பலகமம் பற்றவெளியிலிருக்கும் இதரமள்ளி எள்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் தரை எல்லை கிழக்கு இலந்தையடி வயல் என்னும் கோயில் வயல் தெற்கு இதரம்பள்ளம் என்னும் கோயில் வயல் மேற்கு கோயிலாறு வடக்கு இதரம்பள்ளம் என்னும் கோயில் வயல்

17) தம்பலகமம் பற்றவெளியிலிருக்கும் மூத்தார் என்றழைக்கப்படும் ஒரு துண்டு வயல் தரை எல்லை வடக்கு சின்னவிக்கும் மறு பேருக்குமரிய தோட்டம் கிழக்கு விளங்கண் குடா என்னும் வயல் தெற்கு ஆறு மேற்கு சுவாந்தி அலவரையும் ஆறும்.

18) தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் உள்ள ஒரு துண்டு தரையும் அதிலிருக்கும் தென்னை மரங்கள் தென்னம்பிள்ளைகள் முதலிய வான் பயிர்கள்

19) தம்பலகமம் கோயில் குடியிருப்பில் இருக்கும் ஒரு துண்டு தரையும் அதிலிருக்கும் தென்னை மரங்கள் தென்னம்பிள்ளைகள் முதலிய வான் பயிர்களும்.

20) தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் இருக்கும் ஒரு துண்டு தரையும் அதிலிருக்கும் தென்னை மரங்கள் தென்னம்பிள்ளைகள் முதலிய வான் பயிர்களும் எல்லை வடக்கு பிறப்பாகைத் தரை கிழக்கு ஒழுங்கை மேற்கு ஆறு.

21) தம்பலகமம் கோயிற் குடியிருப்பில் இருக்கும் ஒரு துண்டுத்தரையும் அதிலிருக்கும் தென்னம் மரங்கள் முதலியவான பயிர்களும்.

22) தம்பலகமம் பண்டாரவெளியிலிருக்கும்ஒரு துண்டு தரையும் அதற்கு சேர்மானமான சகல உரித்துக்களும் எல்லை வடக்குவழி தெற்கு மணல் பகுதி பெரிய பகுதி மேற்கு ஆறு கிழக்கு பிறபாகை வயலும் கட்டாடிக் கீத்தும்.

(மேலே சொல்லப்பட்டிருக்கின்ற தோம்புப் பதிவுகளின் படி திருத்தம்பலகமம் கோணநாதேஸ்வரர் கோயிலுக்கு 66 ஏக்கர் வயல் விளை நிலமும் $181x215$ பாகம் தென்னந்தோட்டமும் தேவதானமாக இருந்து வந்தமையால் அண்ணளவாக கணக்கீடு செய்து கொள்ள முடிகின்றது. இருப்பினும் கந்தளாய்க் குளத்தின் நீர்ப்பாசன வலைப்பினலுக்குட்பட்ட நிலம் குளக்கோட்டனே அதனை நிர்மானித்தான் என்பதும் ஆய்வாளர் முடிவாகும்.

## ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

தோம்புப் பதிவில் இடம்பெற்றுள்ள சில இடப்பெயர்கள் விபரம்

1. தம்பலகாமம் நாய்மார்திடல்
2. தம்பலகாமம் கரைச்சித்திடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தம்பலகாமம் கூட்டாம்புளி
4. தம்பலகாமம் பட்டிமேடு கோணமலை
5. தம்பலகாமம் கள்ளிமேடு காறிக்குடி
6. தம்பலகாமம் குச்சியம்படுதிடல்
7. தம்பலகாமம் வண்ணாமேட்டுத் திடல்
8. கொட்டியாரப்பற்றுக்குச் சேர்ந்த கீச்சிலம் பற்றை
9. கோறளைப்பற்று கதிரவெளி
10. திருக்கொட்டியாரப்பற்று மல்லிகைத் தீவு
11. கொட்டியாரப்பற்று கங்குவேலி
12. கொட்டியாரப்பற்று சம்பூர்

## பேரரசப் பல்லவர் காலத்துத் திருக்கோணேஸ்வரம்

பேராசியரியர் நீலகண்ட சாஸ்திரி உட்பட்ட பல வரலாற்று ஆசிரியர்களால் பல்லவர் காலப் பக்தி இயக்கப் பின்னணியில் திருக்கோணேஸ்வரம் பெற்றிருந்த முக்கியத்துவம் நன்கு ஆராயப்பட்டுள்ளது. செல்லத்துரை குணசிங்கம் என்பவர் தனது கோணேஸ்வரம் என்ற நூலில் பல்லவர் காலத் தொடர்புகளை நன்கு ஆராய்ந்துள்ளனர். இருப்பினும் பல்லவர் காலச் சமூக பொருளாதார உருவாக்கப் பின்னணியில் காஞ்சி (கச்சி) ஆராயப்பட்டது. போன்று திருகோணமலை இன்னும் ஆராயப்படவில்லை என்றே கூறவேண்டும். திருகோணமலை மாவட்டத்தில் எண்ணிக்கையில் அதிகமாகக் காணப்படும் பத்திரகாளி அல்லது மகிஜமர்த்தினி கோவில்கள், அவற்றோடு இணைந்திருக்கும் பல்லவ சோழ கல்வெட்டுக்கள் போன்றன அக்காலச் சமூக பொருளாதார உறவுகளை அறிவதற்குரிய சான்றாதாரங்களாகின்றன. ஈழத்தில் வெளிப்படுத்தப்பட்ட பெருமளவிலான பல்லவ கிரந்தக் கல்வெட்டுக்களும், வடமொழிக் கல்வெட்டுக்களும் திருகோணமலை மாவட்டத்திலிருந்தே பெற்றுக் கொள்ளப்பட்டவை ஆகும். இது பல்லவ வம்சத்திற்கும் திருக்கோணேஸ்வரத்திற்கும் இடையே இருந்திருக்கக் கூடிய மிக நெருக்கமான பண்பாட்டு அரசியல் தொடர்புகளையே இனங்காட்டுவதாக கொள்ள வைக்கின்றது. பல்லவர் காலத்தில் பாடல் பெற்ற தலச் சிறப்புக்களின் பின்னணியில் வாணிபப் பண்டங்களின் சிறப்புக்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ள தன்மையை நோக்கும் போது அங்கு சமுத்திரவியல் வழிவந்த பண்பாட்டு செல்வாக்கினை நாம் அவதானிக்க முடிகின்றது. இதன் நிமித்தம் அவை பெருமளவுக்கு கடற்கரைக் கோயில்காக அமைவதற்கும் காரணமாயிற்று. திருக்கோணேஸ்வரமும் இத்தன்மைக்கு விதி விலக்கல்ல.

### பல்லவர், சோழப் பேரரசர் காலத்தின் பின் திருக்கோணேஸ்வரத்தில் கருமம் ஆற்றியகோவில் நிர்வாகிகள்

".....கோயிற்பூசை, உற்சவம், திருப்பணி போன்ற சகல காரியங்களுக்கென்றும் எம்முன்னோர் சாசனம் எழுதிக்கொடுக்கப் பெற்றவர் ஆகையாலும் குறித்த கோவிலின் கல்வெட்டிலும் வேதம், ஆகமம், புராணம் ஆகியவற்றிலும் சொல்லியபடியும் வழமைப்படியும் கோவிலின் "தொண்டு தொழும்பு" செய்த நிர்வாகிகளின் பெயர் கடமை விபரங்கள் போன்றவற்றை தோம்புப் பதிவுகள் இன்று தந்துதவுகின்றன. போத்துக்கீசர் காலத்தில் தொடங்கப்பெற்ற கலையழிவுப் கொள்கைக்கு பயந்து கோணநாதேஷ்வரர் சிவன் கோயிலைப் பற்றிய அரிய தகவல்கள் குறிப்பாக தம்பலகமம் சிவன் கோயிலைப் பற்றியதும் தேவஸ்தான வயல்நிலங்கள் உட்பட அசையும் அசையாச் சொத்துக்கள் பற்றிய விபரங்கள் ஓலைச்சுவடிகள் பலவற்றில் எழுதிப்பாதுகாக்கப்பட்டிருந்தன.அவை பின்னர் ஒல்லாந்தர் காலத்தில் தோம்புப் பதிவுகளாக முத்திரை குத்திப் பாதுகாக்கப்பட்டிருந்தன. இவற்றில் இடம்பெற்றுள்ள சொற்பதங்கள் அதிகாரிகளின் பெயர்கள் ஆவணத்தின் உள்ளடக்கம் போன்றன பல்லவ –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ அரசர்களின் தேவஸ்தானக் கொடைகளில் இடம்பெற்றுள்ளவாறு அதே வகையில் எடுத்துக் கூறப்பட்டுள்ள தன்மை மேலும் ஆய்வுக்குரிய பொருளாகின்றது.

"திருக்கோணாத மலையைச் சேர்ந்த தம்பலகாமம் பற்றிய தம்பலகமக் கோயிற் குடியிருப்பில் சைவசமயப் பிரபல்யமாய் விளங்கும் கோணநாதேஷ்வர சுவாமி கோவிலுக்கு சூரிய — சந்திர — அக்கினி வம்சத்திலே சிரேட்டமாகிய சூரியகுலத்து மனுநீதிச் சோழ மஹாராாசன் மரபிலுதித்த வரராம தேவராசாவின் புத்திரன் குளக்கோட்டு மஹாராசன் மரபிலுதித்த கயவாகு மஹாராாசவினால்......"

செப்பேட்டு சாசனம் வரையப்பட்டு இக்கோவிலின் நிர்வாக ஒழுங்கு முறைகள் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்டன. இவ்வாறு தாமிரசாசனம் செய்து வைக்கப்பட்டதன் பிரகாரம் கோயிற் பணிகளும், பணியாளர் நியமனமும், பொறுப்புக்களும் இக்கோவிலின் பிரதான நிர்வாகியான "இருபாகை முதன்மை" யினால் மேற்கொள்ளப்பட்டது.

இக்கோவிலின் நிர்வாகிகளுள் "இருபாகை முதன்மை" என்ற பதவி மிகவும் அதிகாரம் மிக்கதாகக் காணப்படுகின்றது. பொதுவாக "இராசகுலகுரு"என்ற ஸ்தானத்தினை வகிப்பவரே இக்கோவிலின் இருபாகை முதன்மையாக விளங்குவார். பல்லவ சோழக்கோயிற் கல்வெட்டுக்களில் இப்பதப் பிரயோகம் பொதுமையானதாகக் காணப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கது. கரணம், அடப்பற்தானத்தார், வரப்பத்தார், சங்கமம், சிந்துநாடு போன்ற நிர்வாகப் நிலைகளாகும். இத்தோடு சேர்ந்த இன்னொரு நிர்வாக நிலை "கட்டுக்குளப்பகுதி" என அழைக்கப்பட்டது. கோவிற் பலிசாளர்களுள் கட்டுக்குளப்பகுதி என்னும் நிர்வாகத்துறையானது சோழர் காலத்து ஏரிவாரியப் பெருமக்களது பணியைப் போன்று தொழிற்பட்டது எனக் குறிப்பிடலாம்.

கோவிலின் முதன்மை நிர்வாகியான "இருபாகை முதன்மை" தனது கடமைகளை நிறைவேற்றுவதற்காக தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ்க்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களை நியமித்தும் அதிகாரங்களை வழங்கியும் அவ்வடிப்படையில் தேவஸ்தானத்திற்குரிய ஆதனங்களை வழங்கியும் தொழிற்பட்டிருந்தார் என்பதை அறியமுடிகின்றது.

அவ்வாறு தொழிற்பட்ட உத்தியோத்தர்களுள் சிலர் பூசகர், போதகாசாரியார், சாதகாசபரியார், அலங்கிருதாசாரியார், குருமார், பண்டாரம், ஓதுவார் எனக் குறிக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிட்ட கோயில் உத்தியோகத்தர் "இருபாகை முதன்மைக்கு"தேவையான உதவிகளையும் கடமைகளையும் செப்பமாகச் செய்யாவிடில் அவ்வாறு இருபாகை முதன்மை முடிவு செய்யும் பட்சத்தில் கோவிலின் இருபாகை முதன்மை என்ற நிலையில் மேலே குறிப்பட்ட உத்தியோகதர்களுகுரியபத்தில் இரண்டு பங்கால், அல்லது குறித்த குறித்த கோவிலினுடைய பத்தில் எட்டுப் பங்கால் அவர்கள் பொறுப்பில் விடப்பட்ட வருமானங்கள் அல்லது ஆதனங்களை அவர்களிடமிருந்து மீள எடுத்துக்கொள்வதற்கு உரிமையுடையவராவார்.

இக்கோவிலின் நிர்வாகம் தொடர்பாக குறிக்கப்பட்டுள்ள இன்னொரு முக்கிய அம்சம் "இருப்பு வீடுகள்" ஆகும். குறித்த கோவில்களிடமாக "இருப்பு வீடுகள்"கட்டி அந்தந்தக் கோவில்களின் சகல சம்பத்துக்களையும் அந்தந்த கோவில்களுக்குரிய சாசனங்கள் தாமிரப்பட்டயங்கள் உறுதிகள் போன்றவற்றை அந்தந்த கோவில் இருப்பு வீட்டினிடமாக வைக்கவேண்டியது. குறித்த வீடுகளுக்குள்ள இரண்டு திறப்புக்களில் ஒன்று இருபாகை முதன்மையிடமும் மற்றது ஒருமித்து நியமிக்கும் ஒருவரிடமும் இருக்க வேண்டியது குறித்த கோவில்களின் நேர்கடனுக்காக வரும் ஆடு, மாடு, கோழி முதலியனவைகளும் இன்னும் வேறு சாமான்களையும் ஒருற்கு சேர்த்து அவைகளில் கோயிலுக்கு தேவையானவற்றை வைத்துக் கொண்டு மிகுதியை விற்று கோவிலுக்கு வேண்டியவற்றுக்காகச் செலவு செய்து மிகுதியை இருப்பு வீட்டில் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

குறித்த கோவில்களுக்குரிய நகைகள், பட்டு வஷ்திரங்கள், திருவாசி முதலியன சகலமும் மற்றும் தட்டு முட்டுச் சாமான்கள் சகலமும் கோயிலின் இருப்பு வீட்டில் வைக்கும் படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய வேண்டும். இவ்வாறு இருப்பு வீட்டின் முக்கியத்துவம் கோயில் நிர்வாக முறையில் எடுத்துச் கூறப்பட்டுள்ளமையைக் காண்கின்றோம். இத்தகைய ஒரு செயன்முறையை மத்திய காலத்து வழமைப்பிரகாரம் விதந்துரைக்கப்பட்மையை காண்கின்றோம்.

**நிலம், சொத்துக்கள், அசைவற்ற ஆதனங்கள்**

பின்னாற் சொல்லப்படும் ஆதனங்கள் திருக்கோணதமலை தம்பலகமப்பற்று, தம்பலகமம் திருக்கோணநாதேஸ்வரர் சுவாமி கோவிலாதனமாக அக்கோவிலின் ஏகபூசகரும், இருபான்மையும் என்னும் அதிகாரமுறைப்படி உரிமை மாட்சி பெற்ற ஆதனங்களாகும். அவற்றின் விபரங்கள் பின்வருமாறு:

தம்பல்காமப்பற்று மாக்கை வெளியிலிருக்கும் பெத்தராசிவயல், பெரியஆண்டிவெட்டுவன் வயல் சின்னண்டிவெட்டுவான் வயல், காட்டுக் குடும்பியன்வயல், பெரிய வெட்டுக்காட்டு வயல், முதலியார் வயல் தம்பலகமப்பற்று பெற்ற வெளியிலிருக்கும் ஒலுக்குணி வயல், கரையான் வெட்டுக்காட்டு வயல், சுவாந்தியார் வயல், மந்தணடைக் கீத்துவயல், கரையான்வயல், தம்பகைமப்பற்றுபண்டார வெளியிலிருக்கும் கொண்டு முனை வயல், பிராமணன் கீத்துவயல், உப்புக்குழி வயல், மூத்தார் வயல், மாதோட்டியான் வயல், சின்ன அணைவெட்டுவான் பெரிய அணைவெட்டுவான் வயல், பிரம்மபரு காட்டுக்கீத்து வயல், தௌவில் வெட்டுவான் வயல், தம்பலகமப்பற்று சம்பாந்துறையில் உள்ள பெருந்தரையும் அதில் உள்ள தென்னை மரங்கள், தென்னம் பிள்ளைகள் முதலிய வான் பயிர்கள், தம்பலகமப்பற்று பண்டார வெளியிலிருக்கும் ஒரு துண்டுத் தரையும் அதற்கு சேர்மானமான சகல உரித்துக்களும் ஆக ஏறத்தாழ 6600ஏக்கர் நெல் வயல் விளைநிலமும் 181 X 215 பாகம் பரப்புடைய தென்னந் தோட்டமும் தேவதானமாக ஆங்கிலேயர் பாலம் வரைக்கும் இருந்து வந்தமையை தோம்புகளினூடாக அறிகின்றோம். இவை யாவும் கற்தளாய்க் குளத்தின் நேரடியான பாசனமுறைக்குட்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமம் கோணநாதேஸ்வர்ப்பதிக்கும் பெரும் நீர்ப்பாசன நிருவனங்களின் மீதான சொத்துடமை இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கந்தளாயக் குளத்திலும், மகாமகக் குளத்திலும் காலத்திற்கு காலம் நடைபெற்ற வேள்விகள், ஆடி அமாவாசைத் தீர்த்தங்களின் மூலமும் அங்கு நடைபெற்ற வேள்விகள் மூலமும் கிராமசாந்திகள் மூலமும் பெருந்தொகையான வருமானம் கிடைத்தமை இங்கு சிறப்பாக குறிப்பித்தக்கதாகும். ஆலடிப்பத்தினியம்மன் கோவிலின் வேள்விகள் மூலம் பெற்ற வருமானமும் கோணநாதேஸ்வரப் பதிக்கே சென்றடைந்தது. திருகோணாதமலை கொட்டியாரப்பற்றில் உள்ள கங்குவேலி சிவன் கோயில், வெருகல் சித்திரவேலாயுதர் சுவாமி கோயில் ஆகியவற்றின் பூசை, திருவிழாக்கள், ஆடிஅமாவாசைத் தீர்த்தங்கள் அதற்குரிய கிருத்தியங்கள் மூலம் பெற்றுக்கொண்ட வருமானமும் கோணேஸ்வரப்பதியையே சென்றடைந்தது. மேலும் கந்தளாய் பிள்ளையார் போவிலினதும் பாவிப்புக்காகவுள்ள சகல அசைவுள்ள – அசைவற்றி ஆதனங்களின் வருமானமும் அப்பட்டியலில் சேர்க்கப்பட்டது.

**கோயிற் குடியிருப்புக்கள்**

தம்பலகாமப் பற்றைச் சேர்ந்த நாய்மார்திடல், கரைச்சித்திடல், கூட்டாம் புளியடி, பட்டுமேடு, கோணமலை, கள்ளிமேடு – காறிக்குடி, குச்சியம் படுதிடல், வண்ணா மேட்டுத்திடல், கொட்டியாரப்பற்றைச் சொந்த கீச்சிலம் பற்றை, கங்குவேலி, சம்பூர், கோறளைப் பற்றைச் சேர்ந்த கதிரவெளி திருக்கொட்டியாரப் பற்றைச் சேர்ந்த மல்லிகைத்தீவு ஆகியன ஆதிக்கோண நாதேஸ்வரா கோவிலுக்குரிய பிரதான கோயிற் குடியிருப்புக்களாக விளங்கின. இக்கோயிற் குடியிருப்புக்களுக்குரிய தொழுப்பாளர்களாக ஈரங்கொல்லி (திருக்குளக்கட்டாடி) பரியாரி, பண்டாரம், கந்தியடப்பன், மதிரிப்பணிக்கள், சங்கமம், தோம்புதோர் ஆகியோர் சேவை புரிந்தனர். ஆதிக்கோண நாதேஸ்வரர் திருக்கோவிலின் திருப்பட்டாடை உற்பத்தியை கந்தியடப்பர் அல்லது செங்குந்தர் (சேணியர்) என்ற குல மக்களே மேற்கொண்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுரை.

திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் சிவன் கோவிலின் தோற்றம் வளர்ச்சி, நிலம் சொத்துக்கள், வருமானம், பரிபாலன முறைகள் தொடர்பான சில அடிப்படை ஆய்வுக்குறிப்புக்களை ஆதிப்பல்லவ வம்சமரபு ஒன்றுடன் இணைத்த வகையில் இங்கு நிரைப்படுத்த முடிந்தது. தோம்புக் குறிப்புக்களில் இக்கோவிலைப் பற்றிய மேலதிக விபரங்கள் இன்றும் காணப்படுகின்றன. இக்கோவிலைப் பராமரிப்பதற்காக ஒரு சபை உருவாக்கப்பட்டிருந்தது. அச் சபையில் 33 ஊர்களைச் சேர்ந்த 33 உறுப்பினர்கள் அங்கம் வகித்திருந்தனர். அவர்களது விபரங்கள், கடமைகள் கூட தோம்பில் பதிவு செய்யப்பட்டுக் காணப்படுகிறது. இச்சிறு கட்டுரையின் கண் அவற்றை விபரமாகக் கொடுக்க முடியாதிருக்கின்றது. ஏற்கனவே சோழர் காலத்தில் இந்த இந்துக்கோயில் நிர்வாகம் தொடர்பாக செ.குணசிங்கம் என்பவர் மிகவும் விபரமாக ஆராய்ந்துள்ளார். இங்கே சொல்லப்பட்ட தகவல்கள் ஆய்வாளர்களுக்கு இப் பொழுது தான் முதன் முறையாகக் கிடைக்கின்றது எனலாம். இவ்வகையில் இச்சிறுகட்டுரையின் நோக்கம் இக்கோவிலைப் பற்றிய தோற்றம் தொடர்பாக எதிர்கால ஆய்விற்கு ஆய்வாளர்களை வழிநடத்திச் செல்வதே எனலாம். திருத்தம்பலகாமம் கோணநாதேஸ்வரர் சிவன் கோவில் பற்றிய அரிய தகவல்கள் இன்னும் தம்பசெட்டி வியாபாரி மூலையில் மறைந்து காணப்படுகின்றன. அவற்றையும் சேகரித்துப் பெற்றுக் கொள்ளும் பட்சத்தில் ஆங்கிலேயர் காலம் வரைக்குமான கோணநாதேஸ்வரர் கோயிலின் வரலாற்றை முழுமையாக வரைந்து கொள்வதற்கு வாய்ப்புக்கள் கிட்டும் என எதிர்பார்க்கலாம்.

**ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நூல்கள், ஆவணங்கள்.**


1) Ramachchandra Dikshitar, V.R (Tranld) the silappadikaram, Introduction: PP 01/74: Oxford Uni.press, 1939
2) Devakunjari,D., Madurai through the ages, pub. by SHAER, Madras, 1979.
3) Draniyagala, S.U., The prehistory of Sri Lanka, part I, pub by the department of Archacological survey of Sri Lanka, Colombo – 1992.
4) Gunasingam,S,. The Tamils and Trincomalee, peradeniya, 1979.
5) Xavier, J.T., The land of letter, Trincomalee, 1977.
6) Navaratnam, C.S., Tamils and Ceylon, Jaffna, 1958.
7) தோம்புக் கட்டுத்தொகுதி: வியாபாரிமூலையில் வாழ்ந்த அமரர் சி.நா. சொக்கநாதபிள்ளை அவர்களின் சேகரிப்புக்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வரலாற்றுத் தகவல்கள்.
8) மோஸஸ் பொன்னையா: நாடார் வரலாறு, சீயோன் பதிப்பகம், மதுரை, 1978.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தேர்க்கலை நாயகன் கண்ட நீர்வேலி உலகநாயகியின் நவஸ்ரீசக்கர சிற்பத்தேர்

கலைமாமணி,
விஸ்வ மருப்பிரம்மாச்சார்யார்,
வேலுப்பிள்ளை அம்பிகைபாகன் M.Phil – பணிப்பாளர்,
காங்கேயன் கலைக்கோட்டம்
மயிலிட்டி, யாழ்ப்பாணம்.

இலங்கையில் இந்துக் கலையுலகின் பொற்காலம் ஒன்று மலர்ந்து வரும் நிலையில் அதன் இலக்கண – வரலாற்றியல் பண்பின் எழுத்துருவாக்க நியதிகளின் அவசிய வேண்டுதலின் பின்னணியில் சில கலைச் சிந்தனைகளால் பகிர்ந்து கொள்வது இக்கட்டுரையின் அடிப்படை நோக்கமாகும். இன்றைய நாளில் "உலகத் தேர்க்கலை நாயகன் கண்ட நீர்வேலி உலகநாயகியின் நவஸ்ரீசக்கர சிற்பத்தேர்" வெள்ளோட்டம் காணும் இவ்வேளையில் எமது கலை வரலாற்றியலில் புதியதோர் பரிணமிப்பு உதயமாகின்றது எனலாம்.

கலை வரலாற்றியல் நிலையிலான இவ்வாய்வு

1. ராஜசில்பி விலாடசங்கிலி பாரம்பரியம்
2. கலைஞர் உருவாக்கம் - கலைப்பள்ளி – கலாலயம் - பணிகள்
3. ஸ்தபதி இலக்கணம்
4. மயிலிட்டி ச.ஜெயராசா - ஸ்தபதியார் : பண்பு
5. இலங்கையின் முதலாவது நவஸ்ரீசக்கர சிற்பத்தேர் - நீர்வேலி காளிமுத்துமாரி அம்மன் ஆலயம்

ஆகிய ஐந்து பகுதிகளைக் கொண்டமைகின்றது.

ராஜசில்பி விலாடசங்கிலி பாரம்பரியம்

யாழ்ப்பாண அரசுக் காலத்தில் பரராசசேகர மன்னன் (கி.பி 1478 – கி.பி 1519) ஆட்சியின் போது அவனது விசேட அழைப்பை ஏற்று இந்தியத் தமிழகத்தில் மாவண்டூரில் இருந்து வருகை தந்து மயிலிட்டிப் பகுதியிலிருந்து தனது ராஜசபைக் கடமைகளை நிறைவேற்றிய ராஜசில்பி, மஹா விஸ்வப்பிரம்மஸ்ரீ விலாடசங்கிலித் தாண்டவக் குருக்கள் ஆச்சார்யார் பரம்பரையில் வந்துதித்தவர் தான் செல்வச் சந்நிதித் தேர் (1984) ஸ்தபதி ஜெயராஜா அவர்கள்.

சுமார் 500 பரப்புக் காணியில் தோற்றுவிக்கப்பட்ட சங்கவத்தை அம்பலவாணசுவாமி மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் இலங்கை வரலாற்றிலேயே மிகப்பெரும் பரப்பளவில் அமைந்துள்ள ஆலயம் எனும் பெருமையை தனதாக்கி நிற்பதாகும். மன்னர் மானியம் பெற்ற யாழ்ப்பாணத்தின் ஒரேயொரு விஸ்வகுல சமூக ஆலயம் என்ற வரலாற்று தகைமைசார் சிறப்பும் அதற்குண்டு. இவ்வாலய வளாகத்திலிருந்து இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட நிலப்பகுதியிலிருந்தே யாழ்ப்பாணத்தின் புகழ் பெற்ற மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலை எழுந்து நிற்கும் அதிசயம் ஏனைய ஸ்தபதிகளின் பாரம்பரியங்கள் கண்டிருக்க முடியாத ஒன்று. அது மட்டுமல்ல யாழ்ப்பாணத்து விஸ்வகுல வரலாறு ஏனைய இடங்களில் அறிந்திராத ஒன்றும் கூட.

விஸ்வப் பிரம்மக் கலைகளில் மட்டுமன்றி பொதுவாகவே தமிழ் கலைஞர்களை வளர்க்கும் நோக்குடன் இராஜசில்பி சங்கிலியால் ஸ்தாபிக்கப்பட்ட மயிலிட்டி தமிழ்ச்சங்கம் எனும் அமைப்பு ஈழத்து விஸ்வப்பிரம்ம சமூகத்திற்கு மட்டுமன்றி தமிழ்ச் சமுதாயத்திற்குமே புதியதோர் எழுச்சியை ஏற்படுத்தியிருந்தது. மேற்படி சங்கம் அமைத்த விலாட சங்கிலி தமிழின் தலைசிறந்த கவிச்சக்கரவர்த்தி கம்பனால் பாராட்டப்பட்ட தமிழகத்தின் தலைசிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை நிபுணன் ஜெகத்குரு மாவண்டூர் சிங்கப்பாச்சாரியார் நேர்வழித் தோன்றலில் உதித்தவர் என்பதும் சிறப்பம்சமாகும்.

இப்புகழ்பெற்ற பரம்பரையில் உதித்த குடும்ப வாரிசுகள் மாவிட்டபுரம், தெல்லிப்பளை, வீமன்காமம், நீர்வேலி, சிறுவிளான், திருநெல்வேலி, அச்சுவேலி என்று பரந்து வாழ்ந்து வருகின்ற போதிலும் இவர்கள் அனைவரையும் இணைத்து மயிலிட்டி பாரம்பரியம் / சங்கிலி பரம்பரை என்று வழங்குதல் மரபாகும்.

போர்த்துக்கேய, ஒல்லாந்த அரசுகளின் பின்னரான காலகட்ட வரலாற்றில் மயிலிட்டி நகரிலேயே முதற் கல்வீடு அமைத்த பெருமை சங்கிலித் தவண்டை வழிவந்த கதிர்காமர் ஆச்சாரியாருக்கே உண்டு அவர் வாழ்ந்த வீடு மயிலிட்டி வடக்கில் யாழ்ப்பாண அரசுக்காலம் தொடக்கம் நிலைகொண்டிருந்த போர்த்துக்கேய, ஒல்லாந்த அரசுகளின் வடவலய பிரதம கோட்டையும் நிர்வாக செயலகமுமாகத் திகழ்ந்த அரசு வலயத்தின் வடக்ழக்குத் திசையில் சுமார் 100 மீற்றர் தூர இடைவெளியில் - தொடர் வளவில் அமைந்திருந்தது. இக்கோட்டையின் அருகில் அமைந்திருந்த அமெரிக்கமிஷன் த.க.பாடசாலையே இன்றைய புகழ்பெற்ற கலைமகள் மகா வித்தியாலயமாக 1980 தொடக்கம் திகழ்ந்து வருகின்றது. வளாகத்தின் மையத்தில் கோட்டையும் மேற்கிலே கிறிஸ்தவ தேவாலயமும் சிதைபாடுகளுடன் 1990 ஜூன் 15 ஆம் திகதியன்று மயிலிட்டி நகர் இடப்பெயர்ச்சியின் போது புராதன அரசநகர் போன்ற தோற்றத்தில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குறித்த கதிர்காமர் வாழ்ந்த வீடு 1980 களின் இறுதியில் தகர்க்கப்பட்டு முற்றாக அழிக்கப்பட்டது.

யாழ்ப்பாண அரசு — ராஜ சில்பி விலாடசங்கிலி பரம்பரையினர்க்கிடையிலான தொடர்புகளை உறுதிப்படுத்தக் கூடிய முக்கிய சான்றாதாரமாக வதிவிட அமைவினையும் கருத்திற் கொள்ளலாம். கதிர்காமரின் ஏக புதல்வி சிதம்பரத்திற்கு வழங்கப்பட்ட சீதன நன்கொடை வளவின் பெயர் குருக்கள் வளவு என்பதாகும். இவ்வளவு மேற்குறித்த கோட்டையின் கிழக்கில் அமைந்துள்ளது.

வளரும்....

## வலிவடக்கு...!

மாணிக்கத்தீவின் மணிமகுடம் - வலி வடக்கு
நீர் வளமும் நில வளமும் கொண்டதுவும் - வலி வடக்கு
ஆயகலைகள் அறுபத்து நான்கிற்கும் உதாரணமாம் - வலி வடக்கு
தவில் மேதை தட்சணாமூர்த்திதனை உலகிற்கு தந்ததுவும் - வலி வடக்கு
வரலாற்று ஆலயங்கள் தன்னகத்தே கொண்டதுவும் - வலி வடக்கு
நகுலமாமுனிவர் மாருதபுரகவல்லி பாவங்கள் போக்கியதும் - வலி வடக்கு
சங்கமித்தா மகாபோதியாம் வெள்ளரசு கிளையுடன் வந்து இறங்கியதும் -
வலி வடக்கு
தமிழ் தந்த பண்டிதர்கள், பாவலர்கள் வாழ்ந்ததுவும் - வலி வடக்கு
ஈழத்து காந்தியாம் எஸ்.ஜே.வி உதித்ததுவும் - வலி வடக்கு
முப்படை முகாம்களினை கொண்டதுவும் - வலி வடக்கு
இன்று பாராளுமன்றம் தனில் பேசப்படுவதும் - வலி வடக்கு
போக்குவரத்து மார்க்கங்கள் அனைத்தினையும் கொண்டதுவும் - வலி வடக்கு
குடாவின் ஏகஆறாம் வழுக்கை ஊற்று எடுப்பதும் - வலி வடக்கு
சொல்லில் அடங்கா சொர்க்க பூமி - வலி வடக்கு

திரு ப.மகேசன்
முகாமைத்துவ உதவியாளர்,
வலி.வடக்கு பிரதேச சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காங்கேசன்துறை பிரதேசத்திலிருந்து...**

**சிறுகதைகள் சில...**

1. வைகறை – வேல் அமுதன் - 1977
2. சீசரின் தியாகம் - இரா கனகரத்தினம் - 1952
3. சேதுபந்தனம் - கனகரத்தினம் - 1979
4. மனித சொருபங்கள் - கோகிலா மகேந்திரன் - 1982
5. முரண்பாடுகளின் அறுவடை – கோகிலா மகேந்திரன் - 1984
6. ஒரே ஒரு தெய்வம் - குரும்பசிட்டி கே.எஸ்.சிவகுமாரன்
7. வெண்சங்கு – கனக செந்திநாதன் - 1967
8. மனிதனா நீ – மாதகல் செல்வா – 1962
9. புகையில் தெரிந்த முகம் - அ.செ.முருகானந்தம் - 1950
10. பிரேம தியானம் - விஜயேந்திரன் - 1975
11. சௌந்தர்ய பூஜை - விஜயேந்திரன் - 1970
12. கோகிலம் - தெல்லியூர் செ.நடராசா – 1946
13. தண்டனை - தெல்லியூர் செ.நடராசா – 1946
14. நீல றிபன் - தெல்லியூர் செ.நடராசா – 1947
15. காதல் கொலை - தெல்லியூர் செ.நடராசா – 1950
16. காலேஜ் காதல் - தெல்லியூர் செ.நடராசா - 1951
17. இரகுநாதன் - தெல்லியூர் செ.நடராசா – 1951

**இலக்கண நூல்கள் சில...**

1. மகாவித்துவான் சி.கணேசையர் - நச்சினார்க்கினியம் - உரை விளக்கம் - 1937
2. மகாவித்துவான் சி.கணேசையர் - தொல், சொல், சேனாவரையம், உரை விளக்கம் - 1938
3. தொல், பொருள், முதலாம் பாகம், உரை விளக்கம் - 1938
4. தொல், பொருள், இரண்டாம் பாகம், பின்னான்கியல்களும் பேராசிரியமும் உரைவிளக்கம் - 1943
5. அ. குமாரசாமிப் புலவர் - வினைப்பகுபத விளக்கம் - 1918
6. அ.குமாரசாமிப் புலவர் - இலக்கண சந்திரிகை – 1897
7. மாவை பண்டிதமணி சு.நவநீதகிருஷ்ண பாரதியார் - பாரதீயம் முதலாம் பாகம் - 1948
8. மாவை பண்டிதமணி சு.நவநீதகிருஷ்ண பாரதியார் - பாரதீயம் இரண்டாம் பாகம் - 1948
9. மயில்வாகனப் புலவர் - உயிரியல் நிகண்டு

---

**உலகிலேயே மிகவும் பழமையான புத்தகம் என மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்ட புத்தகம் 1600 வருடங்கள் பழமையான "Coptic Psalter" எனும் புத்தகமாகும். இது 490 பக்கங்கள் கொண்ட சங்கீதங்கள் (பைபிளின் ஒரு பகுதி) புத்தகமாகும். 1984 இல் ஒரு 12 வயதுப் பெண்ணின் கல்லறையிலிருந்து கெய்ரோ நகரில் எகிப்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த புத்தகம் 17 க்கு 13 செ.மீ அளவில் இருந்தது.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் முதல் அம்புலன்ஸ் உருவான வரலாறு !!!



நெப்போலியன் படைப்பிரிவில் பணியாற்றிய தலைமை டாக்டர் டொமினிக் ஜின்லாரேதான் அம்புலன்ஸ் என்ற வார்த்தையைக் கண்டுபிடித்தார். இது பிரெஞ்சு வார்த்தை, 'ஹோபிடல் அம்புலன்ட்' என்னும் வார்த்தைக்கு 'நகரும் மருத்துவமனை' என்பது பொருள். முதல் அம்புலன்ஸ் வண்டி 200 வருடங்களுக்கு முன்பே கண்டு பிடிக்கப்பட்டு விட்டது.

முதலில் குதிரை பூட்டிய வண்டியில் இருந்த அம்புலனஸ் இரயில்கள், கப்பல்கள், விமானங்கள் அம்புலன்ஸில் நோயாளியை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது, பலர் இறக்க நேரிட்டதால் அம்புலன்ஸிலேயே ஆக்சிஜன், ஸ்ட்ரெச்சர், மருந்துகள் முக்கியமானதை கொண்ட குட்டி மருத்துவமனை போல் ஆக்கப்பட்டது. மோட்டார் வாகனங்களில் அமைக்கப்பட்ட உலகின் முதல் அம்புலன்ஸ் நியுயார்க் நகரில் உள்ள பெவில்யூ மருத்துவமனையில் 1869 ஆம் ஆண்டில் மக்களுக்காக பயன்படுத்தப்பட்டது. உலகின் முதல் ஹெலிகாப்டர் அம்புலன்ஸ் இரண்டாம் உலகப் போரில் செயல்பட்டன.

1970க்குப் பிறகு அம்புலன்ஸிற்காகவே பயிற்சி அளிக்கப்பட்ட டாக்டர்கள், நர்சுகள், உதவியாளர்கள் அமர்த்தப்பட்டனர். ஆபத்தில் உள்ள நோயாளிகளுக்கு உடனடி சிகிச்சை அம்புலன்ஸிலேயே அளிக்கப்பட்டது. உலகின் மிகப்பெரிய அம்புலன்ஸ் வேன் பிரிட்டனில் உள்ளது. 59 அடி நீளமுள்ள 44 படுக்கை வசதி கொண்ட அம்புலன்ஸ் அமெரிக்காவில் உள்ளது.

## முதல் மருத்துவ உடை...

அறுவை சிகிச்சை செய்யும்போது கையுறைகள், முக உறைகள், கௌன்கள் போன்றவற்றை அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் அணியும் முறை 1875 ஆம் ஆண்டு அறிமுகமானது.

## முதல் மருத்துவ பத்திரிகை...

அறிவுத் தாகமும், விஞ்ஞான ஆராய்ச்சிகளும் வளர்ந்ததால் இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் நாட்டு விஞ்ஞானிகள் தங்கள் கண்டு பிடிப்புகளின் விவரங்களை பரிமாறிக்கொள்ள விஞ்ஞான பத்திரிகைகளையும், மருத்துவ இதழ்களையும் தொடங்கினர். பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மருத்துவ இதழ்கள் வெளிவர ஆரம்பித்தன. முதல் மருத்துவப் பத்திரிகை 'மெடிசினா குரிஸோ' என்பதாகும். இது ஆங்கிலப் பத்திரிகை. இதன் பிறகே பல மொழிகளிலும் மருத்துவப் பத்திரிகை வெளிவர ஆரம்பித்தது.

## சுத்தமான தண்ணீரை அருந்தச் சொன்ன முதல் மனிதர்கள்...

நோய் ஏற்படாமல் இருக்க வேண்டுமானால் சுத்தமான குடிநீரை மட்டுமே பயன்படுத்த வேண்டுமென பாபிலோனியர்கள் சொன்னார்கள். இவர்கள் நெருப்பைப் போல் நீரையும் இறைவன் என போற்றி வணங்கினார்கள். அத்துடன், மருத்துவக் கடவுளாகப் பாம்பையும் வணங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org